[illegible]
V3. No. 32 14. Apr 1990

3L
ഞ2H, M28K.N
M30.3.32
189116

1257

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ௵ ஆகஸ்டு ௴ 14௳ [No. 32.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 621
2. அப்பர் (யானைஏற்றமும் குதிரைஏற்றமும்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B.L. 623
3. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 625
4. மாதவி மாதவம்—(கண்ணகி கண்டகனு)
பொ. இராமானுஜன் 627
5. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன்தூதுப் படலம்) 629
6. நம்மாழ்வார் வைபவம் (1ம் பத்து—10ம் தசகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 631
7 குறுந்தொகை (பாட்டு 117—123)
K. இராமரத்நம் ஐயர் B. A. 633
8. கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 635
9. வர்த்தமானம் 639

SEP 1930

கலாநிலயம்

மால்வோலியோவின் மரபும் மாய்ந்ததில்லை.

மனிதர் தம் பெருமைக்கு ஓர் இயற்கைக்காவலாய் அமைந்துள்ள மானமும், மற்றெல்லாவற்றையும் போல் தற்காலம் விபரீதமாக விவகரிக்கலாவதைச் சென்றவாரம் ஒருவாறுகுறித்தோம். நாணத்தால் பின்னிட்டு விலகவேண்டிய கருமங்களை நாணமோ சிறிதுமின்றிக் கைக்கொள்வதும், நாணுதற் கிடமில்லாச் செய்கைகளிற் சிலவற்றைச் செய்வதற்கு நாணிநிற்பதும் இந் நாகரிகவுலகத்தின் தொழிலாகி வருகின்றன. மாதர் தம் மெய்யினை மறைத்து மானங்காப்பதற்கு உதவுவது உடை என்பது பண்டைக் கால வழக்காகி விட்டது. இப்பொழுது அவ்வுடை குறைந்துகுறைந்து எம்மட்டில் நின்று நாணத்திலிருந்து எத்தூரம் விலகுகின்றதென்பதனை ஐரோப்பிய மாதர்களிடமும், அவர்களைக்கண்டு வியந்து பின்தொடரும் நம்நாட்டுப் பெண்கள்சிலரிடத்தும் காண்கின்றோம். ஒப்புக்கு ஒரு சாண் துணி ஒட்டிக்கொள்வதல்லால் உடலிற் பெரும்பாகம் தெரியநிற்கும் இதனிற்கு மாதர்கள் நாணவில்லை. அவர்களொடு பயிலும் ஆடவர்களும் நாணுவாரலர். மற்று, இந்நூதன உடைதைக்கப் போதிய பொருள் இன்மையாலேனும், பெற்றோர் முதலியவர் வற்புறுத்தலினாலேனும் கழுத்துமுதல் கணுக்கால் வரையில்மூடிக்கொள்ளும் உடையை அணியவேண்டி நேர்ந்தவள், நாலுபேர் எதிர்வர நாணுகின்றனள். ஏழையென்றேனும் புதுமுறை (new fashion) தெரியாதவளென்றேனும் தன்னைப் பரிகசிப்பர் என்ற நாணத்தால் மானமுடைய உடைதரித்தவள் ஒருத்தியும் வெளியில் தலைகாட்டத் துணிவதில்லை.

நாணமென்பது இப்பொழுது நெறிமாறி எதிர்முகமாய் நடப்பதை, மேல்நோக்காக நோக்குவோரும் இவ் ஆடையின் உதாரணத்திலிருந்து நன்கு உணரலாம். ஆனால் உடலின் புறத்திற்கியைந்த இந்நாணத்தைக் காட்டிலும் அகத்தோடமர்ந்த நாணமோ மிகவும் ஆழமானது. மற்றெல்லா நற்குணங்களையும்போல் மானமும் இடைவிடாது பயிலப்பயிலவே சீரிய கூரிய செம்மைவாய்ந்து மாறுடவாழ்க்கையை இனிது நனி திகழவைக்கக் கூடியதாகின்றது. பயிலவேண்டிய செவ்வியில் மானநிலையினை மதியாது ஒருமுறை நடப்போமாயின், அம் மானம் தேய்ந்தொழியத் தலைப்படுவது திண்ணம். அவ்வாறு ஆயபின் நாணமெனும் நுண்ணுணர்வுஎளிதில்எழுவதில்லை. எழுந்ததெனினும் நெடுங்காலம் நிகழ்ந்திடாது. அந்நிலைக்கு வந்து விழுந்துவிட்டவர் நாம் சொல்லவரும் விடயங்களைத் தெரிந்துகொள்ளவல்ல ஆற்றல் அழிந்துவிட்டவர்களாதலால், மான நிலையைப்பற்றி நாம் வற்புறுத்துகின்ற இவையனைத்தும் ஆகாயக்கோட்டையாகவும், ஆகாத காரியமாகவும் அவர்களுக்குத் தோன்றுவது இயற்கையே. அன்னவர் கிடக்க, ஏனையோர், யாம் காட்டுகின்ற விடயங்களிலுள்ள உண்மையை உரைத்தவளவில் உணர்வாரென்பதில் ஐயமில்லை.

உடலைச் சார்ந்தவைகளைப் போலவே மனதைச் சார்ந்தவைகளுக்கும் பயிற்சி இன்றியமையாததென்பதை நாம் எவ்வெவ்வகையிற் கூறி எத்தனைமுறை வற்புறுத்தினும் ஒன்றும் மிகையாகாது. கூறியது கூறலென்னுங் குற்றம் இதன்திறத்தில் சிறிதுமிலது.

பயிலாததொன்றையும் செய்ய இயலாதென்பது உடலிற்கும் மனத்திற்கும் ஒக்குமோர் உண்மை. ஒன்றினைச் செய்கின்ற ஒவ்வொருமுறையும், மறுமுறை அதனைச் செய்வதை ஒவ்வோரளவு எளியதாக்கிக் கொண்டேவரும் என்பது, உடல் மனம் இரண்டிற்கும் இணங்கிய உண்மைகளில் மற்றொன்று. தரையில் நாம் நடப்பதும் பயிற்சியின் பயனே என்பது நினைத்துப்பார்த்தால் தெரியலாகும். மனதிற்குரிய தூய எண்ணங்களும் அவ்வெண்ணங்களால் தூண்டப்படும் அரியசெயல்களும் எழுவதும் புரிவதும் நிகழநிகழ அவை எளிதில் இயல்வனவாகி வரலாகின்றன. வாய்மை ஈகை பொறை முதலிய மேன்மையாய தன்மைகள் நம்மை இயக்கவருங்கால், அதனிற்கு எதிருற முரணாமல் இணங்க இணங்க அக்குணங்களே இயற்கையாகி மற்றவைகள் முற்றிலும் மறைந்தகலும் செம்மை சேர் மனத்தவராகின்றோம். புறவொன்றின் பொருட்டாகத் துலை புகுவதே சிபிசக்கரவர்த்தியின் மரபிற் கெளியது. அதனை மறப்பதற்கே ஆற்றான் அவன். "பிறர்க்கு நல்கக் கற்றாய்நீ", என்று பரதனுக்குப் பாரீந்து வனமே மேவ நின்ற இராமனை இலக்குவன் புகழ்ந்த சொற்களிலும் இவ்வுண்மையே அடங்கியிருக்கின்றது. தூய எண்ணங்களுக்கு இடந் தரத்தர அவ்வழியொழுகல் இயற்கையொடு எளியதுமாவது போன்றே, ஒருமுறை தீய எண்ணமொன்றிற்கு இடந்தந்தக்கால் வரவரத் தீவினையச்சம் மறைந்து பின் கூசாது தீமையைக் கைக்கொள்ளலாகின்றனர் மாந்தர். முதன்முறை தீய எண்ணமொன்றெழுந்தவுடன் அதனை முயன்று தகைவார்க்கு மறுமுறை அதனை விலக்குவது சுலபமாகின்றது. அது சுலபமாவதுடன் அதனினும் வலிய எண்ணங்கள்வந்து தீயவழிக்கு நம்மை இழுக்குங்கால் அவைகளையும் பிடர்பிடித்துப் புறத்தே உந்தவல்ல ஆற்றலுடையவ ராகின்றோம். ஒருயிர்ப்பில் பத்து கல் ஓடப் பயின்றவனுக்குப் பதினைந்துகல் ஓடுவதும் இயல்வதாவது போன்றதாமிப் பயிற்சி.

நல்லன அல்லனவற்றின்பால் நாணத்தால் நண்ணுதிருக்கும் மனத்தின் மானநிலையும் இத்தகையதோர் பயிற்சியின் பயனும். தன் பயிற்சியும் குலமுறை மரபும் இந்நாணநிலையை நல்கி மானுடர்தம் மேன்மையைக் காக்கின்றன. இந்நாணத்தின் வேரைக்கல்லித் தகர்த்துவிட்டால் பின் சிற்றுயிர்க்கு உற்றதுணை வேறு இல்லாமற் போகின்றது. அதுவுமன்றி, கற்றவரென்றபேரோடிருந்து செல்வம் செல்வாக்குக்களையும் உடையவர் மானத்தை மாய்க்கின்ற செய்கைகளைக் கூசாது மேற்கொண்டு அதனால்வரும் பயனைப் பெருமைக் கடையாளமாகவும் விவகரிப்பாராயின் பாமர சனங்கள் பெருமையைச் சிறுமையென்றும் சிறுமைகளைப் பெருமையென்றும் தலைமயங்கி வாழ்க்கையிற்றும் தடுமாறுவதுமன்றி உலகத்தைப் பல்வேறு வகைகளில் உழக்கிவிடுவதே தொழிலாகமுடியாது வேறு என்னும்! நாணமென்னுமது இவ்வகை எதிருற நடப்பதே, தற்காலத் தாழ்மைகளின் பெரும்பகுதிக்குக் காரணமாகின்றது.

எனின், மானத்தையே இலக்காகக் கொள்ளாத வாழ்க்கை எல்லாப்படியாலும் மாநடத்தொகுதியைத் தாழ்மையுறு தீமைக்கே இரையாக்குமென்பதை ஒருபோதும் மறத்தலாகாது. இவ்வாறு மானத்திறம் பிறழப் பொதுஜனங்களிடை நடக்கின்ற தொழில்களில் மிகப் பெரியது சட்டசபையும் அதன்சார்பாக நிகழும் தேர்தலுமாம். உலகம் மலைய இதனை உரைக்கின்றேமென்று எண்ணவேண்டா. சட்டசபை எக்கருமம் செய்வதற்கு இருப்பதாகக் கருதப்படுகின்றதென்பதையும், அதனில் இடம்பெற முயல்வோர்தம் நோக்கம் இன்னதென்பதையும், தம்மைச் சனங்கள் தேர்ந்தெடுக்கும்படி அவர் பேசுகின்ற பேச்சுக்களையும் செய்கின்ற செயல்களையும், தேர்ந்தெடுத்தபின் அவர் சாதிக்கின்றதென்னவென்பதையும் விரைதலின்றி ஆரவமரச்சிந்தித்து ஆராயவல்லார்க்கு நாம் அதிகம் சொல்லவேண்டுமென்பது மிகை.

ஓட்டெடுத்துத் தேர்தல்கள் நடைபெறுவதன் இயல்பைக்கருதுங்கால் ஷேக்ஸ்பியருடைய வாக்கியம் ஒன்று எம்நினைவிற்கு வருகின்றது. "பன்னிரண்டாம் நாள் இரவு" (Twelfth Night) என்னும் நாடகத்தில், ஒலீவியா என்ற சீமாட்டிஒருத்திக்கு மால்வோலியோ என்ற குடிகாரக் கீழ்மகன் வேலையாளாயிருந்தனன். அவளுடைய வேலைக்காரி மேரியா என்பவள் குறும்புமதி அதிகம் உடையவள். இவள், எசமானியாம் அச்சீமாட்டி, இவ்வேலைக்காரன் மால்வொலியோவின்மீது பெருங்காதல்கொண்டு அவனையே மணக்க விழைவதாக மாயப்பொய்கள் பல நிகழ்த்தி அவனதனை நம்பும்படியும் செய்து, ஒலிவியா எழுதியதுபோல் ஒரு காதற்கடிதம் தானே பொய்யாக எழுதி அவனுடைய கையிற்சேர்த்துவிட்டனள். தன்னுடைய தாழ்ந்த நிலைமைக்கு அவ்வுயர்குலச் செல்வி மனைவியாய் வாய்த்தல் அமையுமோ என்று அப்பித்தன் அயிர்க்காதபடி மேரியா அப்போலிக்கடிதத்தில், "சிலர் பெருமையுடையவர்களாய்ப் பிறக்கின்றனர்; பிறந்தபின் பெருமையை ஈட்டிக்கொள்கின்றனர் சிலர்; வேறு சிலர் பெருமையைத் தம்மேல் (பிறரால்) சுமத்தப்பெறுகின்றனர்" என்ற உலக இயல்பைஎடுத்துக்காட்டி அவ்வாறு "சுமத்தப் பெறுபவன் நீ" என்பதைக் குறிப்பெச்சமாய் வைத்தனள். இந்தக் கொள்கை இவ் "வெலக்ஷன்" திறத்தில் மிகவும் பொருத்தமாயிருக்கின்றது. தேர்தலிற்கு 'அபேக்ஷகராக' நிற்பவர்களிலும், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் ஓட்டுரிமை உடையவர்களிலும் பெரும்பகுதியோர் மால்வொலியோவைப்போல், பெருமையைத் தம்மேல் சுமத்தப்பெற்றவர்களே யாகின்றன ரென்பதை அநுபவவாயிலா யாராயுங்காலையில் நகைக்கே இத்தொழில் இலக்காகின்றதெனின் அதற்கு யார் என் செய்வார். ஒரு தேர்தல்பிரசாரச் சொற்பொழிவினிடையே நம் தலைவர்களில் ஒருவர், "எங்கள் கட்சியில் யார் நின்றாலென்ன? இக்கட்சியின்பேரால் என் கையிலிருக்கும் இந்தத் தடிதான் அபேக்ஷகராக நின்றாலும் நீங்கள் அதற்கே 'ஓட்டு'க் கொடுக்கவேண்டும்" என்று வற்புறுத்தக் கேட்டிருக்கின்றேம். இதற்கு விரிவுரை வேண்டா. பெருமை சுமத்தப்பெறும் இனத்தைச் சேர்ந்தது இக் கைத்தடி. தனக்குந் தடிக்கும் வித்தியாசம் பாராட்டாத மானநிலையைக்கண்டு நாம் நெஞ்சம் நோகவோ விலாவிற நகைக்கவோ, என் செய்வதெனத் தெரிகிலேம். இனி, ஓட்டுரிமை உடைய 'வாக்காளர்கள்' தலையில் தாங்கமாட்டாப் பெருமையைச் சுமத்தி அவர்களுக்குப் பணிவுசெய்து பல நாடகங்கள் நடிக்கின்ற கோலத்தைக்கண்டுங் கூசாத கண்கள் புண்ணுமல்ல. சகுனியின்மரபு சாயாதவரையில் மால்வோலியோவின் மரபும் மாய்ந்திடாது.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

9, 10. யானை ஏற்றமும் குதிரை ஏற்றமும்.

[604-வது பக்கத் தொடர்ச்சி]

(i) சதுரங்க சேனை—காலாட்படை.

யுத்தத்தில் சேனை நால்வகைத் தென்பர். இரதம், கஜம், துரகம், பாதாதி என்னும் தேர், யானை, குதிரை, காலாட்படைகளாம். இந்தியாவில் அரசாண்ட ஐம்பத்தாறு மன்னர்களும் இந் நால்வகைப் படைகளையே உபயோகித்தனரன்றி, ஒட்டை கோவேறுகழுதை முதலிய மிருகப்படைகளைப் பயன்படுத்தியதாய்ப் பழைய நூற்களிற் காணப்படவில்லை. தேர்ப்படையானது அரசர்களும், அரசகுமாரர்களும் ஏறிவரும் சைன்யபாகம். இப் பாகமானது மற்றப் பாகங்களைக் கடாவுவதே தொழிலாம். தேர்வீரன் தேர்வீரனுடன் எதிர்த்துப் போர்செய்வதன்றி ஏனைய படைகளை எதிர்த்துச் சண்டைசெய்தல் மிகவும் அரிது. அர்ச்சுனன்போல், எதிரியின் சேனையிற்புகுந்து எவ்வகைப்படையையும் சுற்றி அவற்றை வீழ்த்தல் சில மன்னரே பெற்ற தன்மையன்றிப் பெரும்பாலும் அரசரிடத்தின்றாம். காலாட்படை, எயினர் மறவர் முதலிய காட்டுவேடர்களை வேண்டுங்காலங் களிற் கொண்டு கூலிக்கு அமைக்கப்படும் சைன்யபாகமாகும். இவ்வேடுவப்படை * மிகவும் வீரப்படை. † சற்றும் கண்ணோக்கமின்றி எதிரியை அழிக்கும் படையாகும். இக்கருத்தைத் திருநாவுக்கரசு நாயனார்,

வேடராய் வெய்ய ராகி வேழத்தி னுரிவை போர்த்து
ஓடரா யுலக மெல்லாம் உழிதர்வ ருமையுந் தாமும்
காடராய்க் கனல்கை யேந்திக் கடியதோர் விடைமேல் [கொண்டு
பாடராய்ப் பூதஞ் சூழப் பருப்பத நோக்கி னாரே.

திருப்பருப்பதம் - திருநேரிசை 6.

வேடர் மிகவும் வெய்யவரென்பர். இத்தகைய காலாட்படைக்கும் இரதப்படைக்கும் இடையேயுள்ளன யானையும் குதிரையு மாம். அவற்றுள் போரில் மிகவும் பயன்படுவது யானையேயாம்.

யானைப்படை - கஜப்பரிட்சை

வெஞ்சமர் வேழத்துரியாயென் விண்ணப்பமே லிலங்கு
வஞ்சமா வந்த வருபுனற் கங்கையும் வான்மதியும்
நஞ்சமா நாக நஞ்சிரமாலை நகுவெண்டலை
தஞ்சமா வாழுஞ் சரக்கறையே வென்றனி நெஞ்சமே

சரக்கறைத் திருவிருத்தம் 5.

* வீரத் தாலொரு வேடுவ னாகி
விசைத்தோர் கேழலைத் துரந்துசென் றணைந்து
போரைத் தான்விசை யன்றனக் கன்பாய்ப்
புரிந்து வான்படை கொடுத்தல்கண் டடியேன்
வாரத் தாலுன நாமங்கள் பரவி
வழிபட் டுன்திற மேநினைந் துருகி
ஆர்வத் தோடும்வந் தடியிணை யடைந்தேன்
ஆவ டுதுறை யாதியெம் மானே.

சுந்தரர்.

† இப்படைவீரர் பெரும்பாலும் மல்யுத்தத்திற் சிறந்தவர். இக்கலையின் இலக்கணம் பின்னர் விவரிக்கப்படும்.

யானைப்படையின்றேல், சேனைக்கு அழகிராது. அதுவே ஒரு பெருங் * குறையாய் நிற்கும். பார்ப்பதற்கு அசைந்தசைந்து செல்வதுபோல் காணப்படினும் யானை மிகவும் வேகமாய்ச் செல்லக்கூடிய மிருகமே. இதன்றியும் இது ஒரு பெரிய யுத்தவண்டியை (Military lorry) இழுத்துச்செல்லச் சக்திபெற்றது. மிகவும் பருத்த துதிக்கைகளைப் § பனைபோன்ற ‡ நீளத்துடன் பெற்றிருந்த சில யானைகள் பல அரசர்களிட மிருந்தனவென்பதற்குச் சான்றுகள் எங்கும் காணலாம்.

யானைகளைப் பிடிப்பதும் வளர்ப்பதும் பிறகு அவற்றை அரசருக்குப் பயன்படுத்துவதும், மற்றும் பல தொழில்களில் அவற்றைக்கற்பித்தலும் அப்பர்காலத்தில் சாதாரணமான ஒரு கலையாயிருந்தது. அக்காலத்தில் மலைச்சாரல்களிலெங்கும் சுயேச்சையாய்க் காடுகளில் யானைக்கூட்டங்கள், இப்போது பெருங்காடுகளில் மான்கூட்டங்கள் $ மேய்வனபோல், மேயும்.

ஞானத்திரளாய் நின்ற பெருமா னல்ல வடியார்மேல்
ஊனத்திரளை நீக்கு மதுவுமுண்மைப்பொருள்போலும்
ஏனத் திரளோ டினமான் கரடி யிழியு மிரவின்கண்
ஆனைத் திரள்வந் தணையுஞ் சார லண்ணா மலையாரே.

சம்பந்தர்.

களிற்றில் மிகவும்பருத்து மதம்பெற்றுள்ளவைகள் பெரும்பாலும் இமயவரைபோன்ற பெரு மலைச்சாரல்களிற் காணப்படும். அவை திருக்கைலாயமலையில்

* உருளுடைய தேர்புரவி யோடும் யானை
யொன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
றிருளுடைய கண்டத்தர் செந்தீ வண்ணர்
இமையவர்க ளொழுதேத்து மிறைவ னார்தாம்
பொருளுடைய ரல்ல ரிலரு மல்லர்
புலித்தோ லுடையாகப் பூதஞ் சூழ
அருளுடைய வங்கோதை மாலை மார்ப
ரழகியரே! யாமாத்தூ ரைய னாரே!

திருவாமாத்தூர் - திருத்தாண்டகம் 5

§ "நினைக்கு நெஞ்சுள் ளார்; நெடு மாமதில்
அனைத்து மொள்ளழல் வாயெரி யூட்டினார்:
பனைக்கை வேழத் துரியுடல் போர்த்தவர்,
அனைத்து வாய்த லுள்ளாருமை யாறரே."

திருவையாறு - திருக்குறுந்தொகை 5.

‡ பனைமல்கு திண்கை மதமா வுரித்த
பரமன்ன நம்ப னடியே
நினைவற்ற சிந்தை யடையாத தேர
ரமண்மாய நின்ற வரனூர்
வனைமல்கு கைதை வகுளங்க ளெங்கு
முகுளங்க ளெங்கு நெரியச்
சினைமல்கு புன்னை திகழ்வாச நாறு
திருமுல்லை வாய லிதுவே. சம்பந்தர்.

$ மானுமரை யினமுமயி லினமுங்கலந் தெங்கும்
தாமேமிக மேய்ந்துதடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமர முரிஞ்சிப்பொழி லூடேசென்று புக்குத்
தேமாம்பொழி னீழற்றுயில் சீபர்ப்பத மலையே.

சுந்தரர்.

காணப்படலாவதைத் திருஞானசம்பந்தரின் திருவாக்கால் காண்க:—

மருப்பிடை நெருப்பெழ தருக்கோடு
செருச்செய்த பருத்த களிறின்
பொருப்பிடை விருப்புற விருக்கை
யொருக்குட னரக்க னுணரா
தொருத்தியை வெருக்குற வெருட்டலு
நெருக்கென நிருத்த விரலால்
கருத்தில் வொருத்தனை யெருத்திற
நெரித்த கயிலாய மலையே.

ஸ்ரீகயிலாயம் - திருவிராகம் - பண் - சாதாரி 8.

அவ்வாறே சுந்தரரும் திருக்கேதாரப் பதிகத்தில்,

முளைக்கைப்பிடி முகமன்சொலி முதுவேய்களை யிறுத்துத்
துளைக்கைக்களிற் றினமாய் நின்று சுனைநீர்களைத் தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர மயின்மான்பிணை நிலத்தைக்
கிளைக்கமணி சிந்துந்திருக் கேதாரமென் னீரே. என்பர்.

இவ்வாறு யாதொரு கட்டிலும் அடங்காது காட்டிற்றிரியும் யானைகளைப்பிடித்துக் $கட்டிப்பழக்குவது குறிஞ்சிநிலவாசிகளுக்கு ஒரு விருத்தியாயிருந்தது. குறவர்வாழும் குடிலுக்கருகில் கம்பங்களில் வேழங்கள் கட்டியிருக்கவும் * அருகிலுள்ள சுனைகளில் தவசிகள் பூசைசெய்வதும் மிகவும் ரம்மியமான † காட்சி ‡ யன்றோ? நெல்முதலிய பெரும் பயிர்த்தொழிலில் ஈடுபடாது விலங்குகள்போற் றிரியும் இந்நில வாசிகள் யானைகளைப் பிடிப்பதும் பழக்குவதும் ஒருகடினமான தொழிலெனக் கருதார். யானையைப்பிடிக்கும் குழிகளைத் தோண்டித் தாம் வளர்க்கும் பிடிகளாற் பெருங்களிறுகளையும் பிடித்து அரசனுக்குத் தந்து பொருள் பெறுதலும் குறிஞ்சிநிலத்தில் சாதாரண செய்கையாம். இதை அப்பரும் தமது தேவாரத்தில் ஒருவாறு குறிப்பிடுவதைக் காண்க.

வேழம் பத்தைவர், வேண்டிற்று வேண்டிப்போய்
ஆழம் பற்றிவீழ் வார்பல வாதர்கள்
கோழம் பத்துறை கூத்தன் குரைகழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே.

பள்ளம் முதலிய சூழ்ச்சிகளாற் பிடித்த யானைகளை ஆட்டிடையர் ஆட்டுமந்தைகளை வளர்ப்பது போல் வளர்ப்பர். நமது சமயகுரவர் காலங்களில், குறவர் இவ் யானைகளை மலைப்பிரதேசங்களில் போஷித்து மிகவும் அருமையுடன் பாராட்டிவந்ததற்குப் பல சான்றுகளுமுள. தேன் முதலிய அரிய உணவுப் பொருள்களும் * யானைகளுக்குக் கொடுப்பரென்றால், மற்றும் $ பகரவேண்டுமோ ?

இவ்வாறு பிடித்தனவும் வளர்த்தனவுமான கைம்மாக்களைக் குறிஞ்சிமக்கள் அரசருக்குத்தந்து காணிக்கைபெற்றுச் செல்வர். அதனால் வேழங்கள் போர்க்காலத்தில் கொலைக்கையானையாய் யுத்தகளங்களில் பயன்படுவதுடன், சாதாரணகாலங்களில் மன்னர்கள் ஏறிப் பவனிவரப் பயன்படும். இதைச் சுந்தரரது,

மத்தயானை யேறிமன்னர் சூழவரு வீர்காள்
செத்தபோதி லாருமில்லை சிந்தையுள்ளவம் மின்கள்
வைத்தவுள்ள மாற்ற வேண்டா வம்மின்மனத் தீரே
அத்தர்கோயி லெதிர்கொள்பாடி யென்பதடை வாமே

என்னும் திருவெதிர்கொள்பாடித் திருப்பதிகத்தின் முதல்பாசுரத்திற் காண்க. பெருமன்னர்கள் மாத்திரமல்லாமல், அவரைச் சார்ந்தவரனைவரும் யானை ஏறிச்செல்லத் திறன்பெற்றிருந்தனர். இன்றேல் சுந்தரமூர்த்திநாயனார் திருக்கைலாயத்திற்கு யானையின்பேரில் சென்றிரார். இவருக்கு யானையும் குதிரையும் ஏறும் வழக்கம் அதிகமாயிருந்ததனால் வெஞ்சின வெள்ளை யானையின், மலையினிடையே செல்லுதல் இவருக்கு யாதொரு கஷ்டமும் தரவில்லை போலும்.

நிலைகெட விண்ணதிர நில மெங்கும திர்ந்தசைய
மலையிடை யானையேறி வழியேவரு வேனெதிரே
அலைகடலாலரையன் னலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையனை யாதவண்ணம் நொடித்தான்மலை யுத்தமனே

$ கம்பமருங் கரியுரியன் கறைமிடற்றன் காபாலி
செம்பவளத் திருவுருவன் சேயிழையோ டுடனுகி
"நம்பி! யிங்கே யிருந்தீரே?"

* கொம்பைப் பிடித் தொருக்காலர்க ளிருக்கான்மலர் தூவி
நம்பன்னமை யாள்வனென்று நடுநாளையும் பகலும்
கம்பக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவி
செம்பொற்பொடி சிந்துந்திருக் கேதாரமென் னீரே.
பண்ணின்றமி ழிசைபாடலின் பழவேய்முழ வதிரக்
கண்ணின்றொளி கனகச்சுனை வயிரம்மவை சொரிய
மண்ணின்றனமதவேழங்கண்மணிவாரிக்கொண்டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதாரமென் னீரே.

† எந்துதிணி திண்டோளி ராவணனை — சுந்தரர்.
மால்வரை கீழடற வூன்றிச்
சாந்தமென நீறணிந்த சைவரிடம்
போலுஞ் சாரற் சாரல்
பூந்தணறு வேங்கைக் கொந்திறுத்து
மத்தகத்திற் பொலிய வேந்திக்
கூந்தற் பிடியுங் களிறுமுடன்
வணங்குங் குறும்பலாவே. — சம்பந்தர்.

மலைச்சாரலும் பொழிற்சாரலும் புறமேவரு மினங்கள்
மலைப்பாற்கொணர்ந் திடித்தூட்டிட மலங்கித்தன் களிற்றை
அழைத்தோடியும் பிளிறியவை யலமந்துவந் தெய்த்துத்
திகைத்தோடித்தன் பிடித்தேடிடுஞ் சீபர்ப்பத மலையே.
— சுந்தரர்.

திரியும்புர நீருக்கிய செல்வன்றன கழலை
அரியதிரு மாலோடயன் றானும்மவ ரறியார்
கரியின்னின மோடும்பிடி தேனுண்டவை களித்துத்
திரிதந்தவை திகழ்வாற்பொலி சீபர்ப்பத மலையே. — ஷை.

‡ இலைத்தலை மிகுத்தபடை யெண்கரம்
விளங்கவெரி வீசி முடிமேல்
அலைத்தலை தொகுத்தபுனல் செஞ்சடையில்
வைத்தவழ கன்றனிடமாம்:
மலைத்தலை வகுத்தமுழை தோறுமுழை
வாளரிகள் கேழல் களிறு
கொலைத்தலை மடப்பிடிகள் கூடிவிளையாடி
நிகழ் கோகரணமே. — சம்பந்தர்.

* ஆனைக்குல மிரிந்தோடித்தன் பிடிசூழலிற் றிரியத்
தானப்பிடி செவிதாழ்த்திட வதற்குமிக விரங்கி
மானக்குற வடல்வேடர்க ளிலையாற் கலைகோலித்
தேனைப்பிழிந் தினிதூட்டிடுஞ் சீபர்ப்பத மலையே.
— சுந்தரர்.

$ ஆனையாறென்பது ஒருவகை ஆட்டம். அது யானை போல் அசைந்து அசைந்து ஆடுதல். இது முன்னோர் நாளிலிருந்து வழக்கத்திலுள்ள செல்வாக்காட்டமாம்.

ஆனை யாறென வாடுகின் றான்முடி
வானை யாறுவ ளாயது காண்மினோ
நானை யாறுபுக் கேறிகவ னின்னருள்
தேனை யாறுதி றந்தாலே யொக்குமே.
திருவையாறு - திருக்குறுந்தொகை 9.

என்னும் வன்றொண்டர் பாசுரங் காண்க.

அரசர் காட்டுமார்க்கங்களில் பிரயாணம் செய்வதற்கு அக்காலத்தில் யானைகளை *உபயோகித்தாரென்பதற்கு நம்பியாரூரர் வடதிரு முதலிய வாயலின் 10-ம் பாசுரங் காண்க:—

சொல்லரும் புகழான் தோண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட்
டருளிய விறைவனே யென்றும்
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயி
நாதனே! நறைவிடை யேறீ!
மல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே!

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[606-வது பக்கத் தொடர்ச்சி]

(நடத்தை - Behaviour)

தட்டித் தடமோறித் தகுதி கற்றல்:—இதுவரைக் கூறிவந்ததிலிருந்து விலங்குகள் தட்டித் தடுமாறித் தகுதியைக் கற்கின்றன என்பதாயிற்று. கண்ணால் பார்த்துக் கற்றுக்கொள்வதும் இல்லை; அவை அறிவாராய்ச்சி செய்து கற்றுக்கொள்வதும் இல்லை. தாமே செய்து பார்த்துக்கொள்கின்றன. இது ஒரு குருட்டுவழியேயாம். இஃதே முயன்றும் தவறியும் கற்கும் முறையாகும் (Method of trial and error). முன்புறமாகக் கம்பிகள்மட்டும் பாய்ச்சிய கதவோடு கூடிய ஒரு கூட்டில் பசிமிகுந்தவோர் பூனையைத் தார்ன்டைக் (Thorndike) என்ற பெரியார் அடைத்தார். எதிரிலே கூட்டின் வெளியில் தீனியை வைத்தார். கம்பிகளினிடைவழியாகப் பூனை அத் தீனியைக் கண்டது. கால்களையும் முகத்தையும் இயக்கியது. கம்பிகளை அசைத்தது; முகர்ந்தது; கடித்தது; உகிரால் கீறிற்று; பல்லால் கடித்தது. கதவைத்திறப்பதற்கு உட்புறமாக ஒரு குமிழ் வைத்திருந்தார். அதை அழுத்தினால் கதவு திறக்கும். இவ்வாறு உள்ளே இயங்கியிருந்த பூனை தற்செயலாக அக்குமிழை அழுத்திவிட்டது. கதவு திறந்துகொண்டது. மறுமுறையும் மறுமுறையும் உள்ளடைத்தால், குமிழ் உள்ள இடத்திற்கு அருகில்எல்லாம் காலையும் முகத்தையும் தேய்த்தது. அந்தப்புறமாகத்தான் இயங்கிச் செயல்புரிய வேண்டுமென்று உணர்ந்ததேயன்றிக் குமிழை அழுத்துதலை இன்னும் அறியவில்லை. குமிழைச் சுற்றியெல்லாம் இயங்கி வரும்போது தற்செயலாகக் குமிழின்மேல் காலோ முகமோ பட்டுக் கதவு திறந்துகொண்டது. பயிற்சியாகப் பயிற்சியாகக் குமிழைச்சுற்றி இயங்கும் இடம் சுற்றளவில் குறைந்துகொண்டே வந்து குமிழில்முடிந்தது. இந்தநிலைக்கு வந்தபிறகு நேரே குமிழை அழுத்திக் கதவைத்திறந்து தீனியை அடைந்தது.

அறிவு குருட்டுப் போக்கா ?:— தட்டித் தடுமாறி தகுதிகற்றலைக் கண்ட நடத்தைக்கொள்கையினர் கல்வியனைத்தும் அறிவனைத்தும் குருட்டுப்போக்கே, தற்செயலாய் அறிவதே, என முடிவுகட்டுகின்றனர். அவ்விலங்கு அக்கூட்டிடை காணப்படும் கம்பிகளும் பலகைகளுமாகிய தூண்டல்களால் தாக்கப்பட்டுக் காலையும் முகத்தையும் குறிப்பின்றி இயக்கிப் பல மடக்குச் செயல்களை எதிருன்றல்களாகச் செய்ததாம். தற்செயலாய்க்குமிழில் கால்படும்வரை இச்செய்கைகள்தொடர்ந்துநிகழ்ந்தனவாம். குமிழைஅழுத்திவெளிவந்தபோது சிறைமீண்ட இன்பமானது குமிழ் அழுத்தும் மடக்குச்செயலை அதன் மனதில் பதியவைத்ததாம். ஆதலின் அந்த நிலையில் மறுபடியும் கூட்டில் வைக்கப்பட்டால் குமிழைப்போய் அழுத்துகின்றதாம். ஆனால்இவர்கள் கொள்கைப்படி இஃது நிகழ்வது எங்ஙனம்? குமிழ்எழ அழுத்துதல் காலத்தால் முந்தியது; இன்பமாம் உடன்மாறுதலோ பிந்தியது. பிந்தியது முந்தியதை எங்ஙனம் பதியவைத்தல் கூடும். முதல் பின்னும் பயன் முன்னுமோ வருவது.

நோக்கமுடைமை:—மனத்தின் இயக்கமனைத்தும் பொறிகளின் இயக்கம்போலப் பொருள் அற்றன எனக் கொள்ளாது அவ்வியக்கங்களை ஆராய்ந்துபார்த்தால் தட்டித்தடுமாறும் இந்தப் பூனையின் இயக்கங்களினிடையே ஒரு நோக்கத்தைக் காண்போம். உணவு நாட்டத்தால் எழுந்த இயக்கங்கள் அன்றோ அவை. பழையதுய்த்துணர்வைப் பயன்படுத்திக்கொண்டு, பின் வருவதை எதிர்பார்த்துநின்று அவ் வெதிர்ப்பிற் கேற்ற செயலை நிகழ்காலத்தில் செய்வதே மனதின் செயலாகும். இதனை இப்பூனையினிடத்தும் காணலாம். உணவு நாட்டத்தால் இயங்கத் தொடங்கியபோது தீனியை உண்ணுதல் என்ற தன் செயல்களின் முடிவைக் கனாக் கண்டது போலவேனும் தனது மனதில் எதிர்பார்க்கின்றதன்றோ? கூட்டில் பழகும்போது இம்முடிவும், அம்முடிவை யடையும்வழிகளும் கலக்கமாக இல்லாமல் விளக்கமாகிக்கொண்டே வருகின்றன. ஒருமுறை விடுபட்டபின்னும் கூட்டில் அடைபட்டால் குமிழழுத்தி விடுபட்டுச் சிறைமீண் டின்புற்ற பழைய துய்த்துணர்வைப் பயன்படுத்திக்கொண்டு மேல்வருவதாகிய சிறைமீட்சிக்கேற்ற செயலைக் குமிழுக்கருகில் சென்று செய்யத்தொடங்குகிறது. இவ்வாறுதான் பிந்தியது முந்தியதற்கு முதலாகியது. பிந்தியதன் நினைவே பின். முறையில் முந்தியதனையே நினைப்பூட்டி முடிக்கின்றது. இந் நோக்கமுடைமையையும் எதிர்பார்ப்பையும் உடன்படாத நடத்தைக்கொள்கையினர்கள் இதனை விளக்கிவைக்க முடியாதன்றோ? மக்களும் பூனையாவர். இவ்வகையானசெய்க்காட்சிகளைக்கொண்டே விலங்குகளின் அறிவின்மையை நிலைநாட்ட முடியாது. கற்றுத்தேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பலரைக் கூட்டில் அடைத்துப் பட்டினிகிடக்கவிட்ட பின்னர் அக்கூடுகளின் எதிரில் நறுமணங்கமழும் நல்லுணவைப் பரப்பி வைத்தால் அவர்கள் நிலையும் இந்தப் பூனையின் நிலைமை போன்றே தோன்றும் என்கிறார் மக்டூகல் என்பார்.

இவர்கள், தம் கூட்டின் அடியிலுள்ள மணலை உகிரால் கீறிச் சிறு பள்ளமாக்கி அதில் தம் மூக்கைத் தேய்த்தால்தான் திறக்கக்கூடியவகையில் அக்கூட்டைஅமைத்தால் அக்கல்வியாளரின் அறிவுச்செயல்களாக எதனைக் காண்போம். உகிராற் கீறுதலையும் மூக்கால் தரையைத் தேய்ப்பதையும் அன்றோ காண்போம். செவ்வாய் உலகிலிருந்து வந்தவன் ஒருவன் இதனைக் கண்டால் இத்துணையே இவர்கள் அறிவென முடிவு கட்டுவான் என்கிறார் மக்டூகல் என்பவர். இக்குறை செய்க்காட்சியிற்றான் உண்டேயன்றிக் கல்வியாளரின் அறிவில் இல்லை. அங்ஙனமே பூனையின் அறிவின் குறைவு செய்க்காட்சியைப் பற்றியதேயன்றி அதன் அறிவைப்பற்றியதன்று. இச்செய்க்காட்சியில் அறிவு தடைப்படக்கூடியநிலையில் அறிவு எவ்வாறு தடைப்படுகிறது எனக் கண்டுகொள்வதால் என்ன பயன்? அறிவு விளங்கக்கூடிய நிலையில் விலங்குகள் எவ்வாறு அறிவைப் பயன்படுத்திக்கொண்டு மாறிய நிலையோடு பொருத்தமுறுகின்றன என்றறிவதற்கே செய்க்காட்சிகள் வேண்டும்.

நாயினறிவு:—மக்டூகல் என்பார் அத்தகைய செய்க்காட்சி ஒன்று செய்துகண்டார்.

பத்துவிரற்கடை(Inch)உயரம் நீளம் அகலமுள்ள பெட்டி ஒன்று செய்தார். இருபது விரற்கடை அகல நீளமுள்ள பலகையில் அதனை முடுக்கி வைத்தார். பெட்டிக்கு ஒரு மூடியிருந்தது. அம்மூடியி னொருபுறத்தில் கீல் தைத்தார். கீல்தைத்த புறத்தில், மூடியின் நடுவே ஒரு சட்டத்தைக் கீலிருக்கும் புறமாக வெளிக்குநீண்டிருக்குமாறு ஒரு கைப்பிடியாக அமைத்தார். இக்கைப்பிடியை அழுத்தினால் அம்மூடி திறக்கும். தான் வளர்த்துவரும் நாயின் எதிரே அது பார்க்கும்படியாக அது தின்னும் வடை யொன்றை அப்பெட்டியில் இட்டார். (1) பசியால் இருந்த அந் நாய் தன் தீனி அப்பெட்டியிலிருப்பதைக் கண்டு அதைத் திறக்க முயன்றது. மூடியின் முன்புறம் சென்று தன் மூக்கினாலே தூக்கித்திறந்து வடையைப்பெற்று உண்டது. (2) இவ்வாறு எளிதாக உணவு அடைவதனைத் தடுக்க அம்மூடியின் ஓரத்தைச்சுற்றிலும் செதுக்கிப் பெட்டியின் மேலோரங்களையும் செதுக்கி அம்மூடி உள்ளே போய்த் தங்க ஒரு காடி வெட்டினார். மூடியின் மேற்புறமும் பெட்டியின் நாற்புறப் பலகைகளின் மேற்புறமும் ஒரே அளவாக இருந்தமையின் மூக்கால் மூடியைத் திறக்க முடியவில்லை. என்றாலும் பழமைபோல் மூடியைமூடிக்கொண்டிருந்தபோது ஒரு முறை விசையாக முட்டியதால் பெட்டி கவிழ்ந்தது. மூடியும் திறந்துகொண்டது. நாயும் தீனிபெற்றது. பின்னர் அந்நாய் முட்டிக் கவிழ்த்துத் தீனிபெற முயன்றது. (3) இதனைத் தடுப்பதற்காகத் தம் காலைக் கீழுள்ள பலகையின்மேல் வைத்துப் பெட்டி கவிழாதபடி அழுத்திக்கொண்டார். இவ்வாறு அழுத்த மறந்துவிட்டதால் கவிழ்க்கமுயன்றது. அழுத்திக்கொண்டிருக்கும்போது தனது பழைய முறைகள் பயன்படாது போகவே பெட்டியைச்சுற்றிலும் காலாற் கீறி மூக்கால் முட்டிக் கடித்தது. இவ்வாறு வருகையில், கைப்பிடியில் காலை வைத்தழுத்தியது. மூடி திறந்தமை கண்டது. அதைவிட்டு முன்புறம் ஓடியது. மறுபடியும் மூடி கீழ் வீழ்ந்தது. கைப்பிடியை அழுத்தியபோது முன்மூடி சிறிது திறந்ததும் கைப்பிடியை விடுவதற்குமுன் தன் மூக்கை மூடியினடியில் வைத்துக்கொண்டது. பழக்கத்தால் இவ்வாறு திறக்கும் வகையைத் திருத்தமுறச் செய்தது. (4) இதனையும் தடுப்பதற்கு, அம்மூடியின் திறப்புவாயின் மூலையொன்றில், ஒரு சுற்றுத் தாழ்கோலாக ஒரு சட்டத்தை முறுக்கி வைத்தார். அச்சட்டம் மூடியை அழுத்திக்கொண்டது. மூடியைத் திறக்கவேண்டுமானால், இச்சுற்றுத் தாழ்கோலை முன்புறமாகச் சுற்றித் தள்ளிவிடுதல் வேண்டும். இந்நிலையில் இந்த நாய் கைப்பிடியை அழுத்துவதால்மட்டும் மூடியைத் திறக்கமுடியாது அலைந்தது. பெட்டியைச் சுற்றிக் காலால் தேய்த்தும் கீறியும் வந்தது. தற்செயலாக அச்சுற்றுத் தாழ்கோலைத் தள்ளியது. தள்ளியபின் கைப்பிடியை அழுத்தி, மூக்கை மூடியின்கீழ் வைத்துத் திறந்து தீனியை அடைந்தது. சிலபோது சுற்றுத் தாழ்கோலை வேண்டிய அளவு திருப்பாமற்போனால் கைப்பிடி மேலெழும்பாது. அது கண்டு மறுபடியும் வந்து சுற்றுத்தாழ்கோலைப் பின்னும் முன்னுக்குத் தள்ளும். (5) இதற்குமேலுமோர் தடையை வைத்தார். கைப்பிடி நீண்டிருக்கும் புறமாகப் பெட்டியளவு உயரமுள்ள ஒரு மரப்பலகை நெடுக்காகக் கீழ்ப்புறத்தில் கீல்வைத்து அடிப்பலகையில் தைத்தார். இப்பலகை நிற்கும்போது கைப்பிடி இதன் மேல் தங்கும்; ஆதலின் சுற்றுத் தாழ்கோலைத் திருப்பிய பின்னும் கைப்பிடியைக் கீழ் அழுத்தமுடியாது. முடியாதபோது நாய் அங்கும் இங்கும் பெட்டியைச் சுற்றியோடி அதன் ஒவ்வோர் உறுப்பையும் கடித்தும் கீறியும் முட்டியும் வந்தது. அவ்வாறு முட்டும்போது இந்நெடுக்குப் பலகை, கீல் தைத்திருப்பதால் கீழ்வீழ்ந்து மடிந்துகொண்டது. பின்னர்க் கைப்பிடியை அழுத்திப்பார்த்து அது அசைவது கண்டு மூக்கை மூடிக்குள் விட்டுக்கொண்டது. இவ்வாறு பல தடைகளையும் நீக்கிக்கொண்டு தன்உணவை அடைந்ததாம்.

முயன்று தவறுவதிலும் நோக்கமுண்டு:—இதன் செயல்களை மடக்குச்செயல்கள் என்று எங்ஙனம் கூறமுடியும். தன்னுறுப்புக்களைக் கண்டபடி இயக்கிப் பின் தற்செயலாக மூடியைத் திறந்தது என்பது உண்மையே. ஆனால் கண்டபடி இயக்கியது பெட்டியைச் சுற்றியேயன்றிக் கிணற்றைச் சுற்றியன்று. வேலியைச் சுற்றியன்று.வடையை உள்ளே போகக்கண்டபின் அந்நாய் அம் மூடியைத் திறக்கவேண்டும் என்று முயன்றது. அதன் பயனாக அதன் செயலனைத்தும் மூடியைப் பற்றித் தான் எழுந்தன. வடை பெட்டிக்குள்தான் உள்ளது என நம்மைப்போல் முடிவுகட்டியது எனலாம். சிலபோது ஏமாறிப் போயிற்று. கைப்புரட்டாளர்எதிரில் நாமும் அவ்வாறு ஏமாறிப்போகவில்லையா? வடையையும் மூடியைத்திறக்கவேண்டு மென்பதையும் அது தன் மனதில் எண்ணியிருத்தல் வேண்டும். பழகப்பழகத் திறக்கும் வழி தெளிவாக அதன்மனதில் எழுந்திருத்தல் வேண்டும்.இவ்வாறெல்லாம் அறிவைப் பயன்படுத்திக்கொள்ளும் விலங்குகளை அறிவற்றன என்று எங்ஙனம் சொல்லுவது. கூழாங்கல்லைத் திமிசாகப் பயன்படுத்திக்கொண்ட குளவி யறிவற்றதா? கூட்டலும் கழித்தலும் பெருக்கலும் வகுத்தலும்போடும்படி ஹெர்க்ரால் என்பவர் குதிரைகளைப் பழக்கினாராம்.'

சிறப்புணர்வு:-உயர்நிலையடைந்த உயிருளிகள் தாம் இனத்தை உணர்வதோடு அந்த இனத்தைச்சேர்ந்தவற்றை வெவ்வேறு பிரித்தறிகின்றன. இயற்கைச்செயனிலையின் பயனாய இயற்கையுணர்வு இனத்தைமட்டும் உணரும். கிளியென்றும் புலியென்றும் உணருமேயன்றி அக்கிளிகளில் இக்கிளியையும் அக்கிளியையும் வேறுபிரித் துணருவதில்லை. ஆனால் அகமுடையானும் பெண்டாட்டியுமாய் வாழ்பவை இனத்தைமட்டும் அறிந்தால் போதாது; அவ்வினத்தில் தமது பெண்டாட்டியை வேறு பிரித்துணர்தல் வேண்டும். அங்ஙனமே கூடுகட்டி வாழ்பவையும் பிறகூட்டின் நின்றும் தம்கூட்டை வேறு பிரித்துணர்கின்றன.இச்சிறப்புணர்வு செயற்கை யுணர்வாகும். நமது நாய்கள் இவ்வகையிற் பலபொருள்களையும் மலரையும் வேறு பிரித்துணர்கின்றன அன்றோ. நண்பர், அயலார், பகைவர், தலைவர் என்றிவ்வாறு வேறுபிரித்து அவ்வவர்க்குத் தக்கவாறு இயங்குகின்றன. மாலையில் வீட்டுக்கு வருகின்றேன். வீட்டிற்குள் நூறடி தூலவில் நாய் படுத்திருக்கிறது. நம்மைப்போல் நமது நாயின் கண் தூலைவில்உள்ள பொருளை யறியமுடியாதாதலின் என்னை யுணராது குரைத்து எதிர்வருகின்றது. அருகில் வரவரச் சினந்தநிலை மாறி அன்புநிலையோ டெதிர்கொள்கிறது. அருகுவருவதற்குமுன் சிறிதுபோது, தலைவனா அயலானா என்று துணியமாட்டாது தயங்குகின்றது. என் குரலைக் காட்டாதிருந்தால் இருட்டில் என்னை மோந்தபின்னர்த்தான் உணர்ந்து தெளிகின்றது.இருட்டிலே நமது நண்பர் ஒருவர் வீட்டிற்கு வந்தாலும் இவ்வாறு மயங்கித் தெளிகின்றோ மன்றோ? நமது நடத்தைக்கும் நாயின் நடத்தைக்கும் உள்ள வேற்றுமை யாது? ஐயம் கொண்டு தயங்கிப் பின்னர் இவர்தான் 'நண்பர்' என நாம் முடிவு கட்டுகின்றோம். ஆனால் இவர்தான் நண்பர் என்ற சொற்களைப் பயன்படுத்தாமலே நண்பர் என்ற தெளிந்து முகமலர்ந்து தோள்மேல் கையிடுகின்றோம். இங்ஙனமன்றோ நாயுந் தயங்கிப் பின் முடிவுகட்டுகின்றது.

மாதவி மாதவம்

[608 - வது பக்கத் தொடர்ச்சி]

7. கண்ணகி கண்ட கனா.

புகழும் போகமும் ஒருங்கே நிலைபெற்று விளங்கும் புகார்நகரிலே, பெருங்குடி யென்னும் வணிகமரபில், மாநாய்கன் என்னுந் திருப்பெயரோடு, மழைபோல்வழங்கும் ஈகையாளனாய் விளங்கினன் ஒருவன். அன்னான் ஆருயிர்ச்செல்வி, வானவல்லி போல்வாள், பன்னீராண்டகவையாள்; உலகின் மாதரால் "திருமகளின் புகழ்வடிவு இவள் வடிவையொக்கு" மென்றும், "பழுதற்ற அருந்ததியின் கற்பின்திறன் இவள்கற்பையே நிகர்க்கு"மென்றும் தொழுதேத்திக் கூறத்தக்க அருங்குணங்களுக்கு உறைவிடமானவள். அவள்தான் கண்ணகியென்னுந் திருப்பெயரினள். நம் வரலாற்றுத் தலைவன் கோவலன்தன் உரிமைமனைவி. அக் கண்ணகி யென்னும் பெண்ணணங்கு தன் கணவனுடன் சில வாண்டே கூடிவாழும் பேறுபெற்றனள். தனது தலைவன் கோவலன் தன்னிற்பிரிந்து பன்னெடுமாண்டுகள் மாதவியென்னும் நாடகமகளொடு ஆடிப்பாடிக் கூடி மகிழ்வதையறிந்தும் தன் கரையற்ற துயர்ப்பெருக்கை வெளியே காட்டியறியாள். இங்ஙனம் நேர்ந்ததெல்லாம் தனது முற்பவத்தின் தீவினையேயெனத் தன்னையே வெறுப்பளன்றி, மற்றுத் தன் கணவனோ தவறுடையானெனக் கனவிலுங் கருதாள். "கண்டாரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும், கொண்டானையல்லா லறியாக் குலக்கொடி" என்னும் பெரியாரின் திருமொழிக்கு எடுத்துக்காட்டாவாள் இவளே. இங்ஙனம் அருங்குணங்கள் யாவும் தமக்கு உறைவிடமாவாள் இவளேயெனப் புக்க கண்ணகியென்னும் இப்பெண்ணரசி தன் தலைவன் தன்னிற்பிரிந்து, தான் உறையும் ஊரில் தனக்குமுன்னரேயே மற்றொரு மாதொடு கூடிவாழ்வதைக்கண்டு மனம்நைந்து, வாடிய பூங்கொம்பெனச் சோர்ந்து "என்று என் ஆருயிரனையானொடு இன்புற்றுவாழ்வேன்?" என ஏங்கி, "இன்று வருவர், அன்றி நாளையாவது வருவர்" என நாட்களையெண்ணிவருந்துபவள் ஓர்நாளிரவு கனவொன்று கண்டாள். அந்தோ, அக்கனவிலாவது அவள் தனது கணவனுடன் வாழ்க்கைநடத்தும் பேறுபெற்றவளாதல் கூடாதா? அதுவும் தீய கனவாக முடிந்தது. அதனால் அக்கனவு இத்தகையது எனயாரிடத்தும் கூறத்துணிந்திலள். மற்று அவ்வப்பொழுது அறவுரைகூறி, ஆறுதலளித்துத் தன் உயிர்க்கோர் அரணெனப் பொலியும் தனது அருமைத்தோழி தேவந்தியென்பாளுக்கும் அறிவித்திலள்.தேவந்தியென்னும் அவள்தோழி பார்ப்பனமரபிற் பிறந்தவள். இளமையிலிருந்து கண்ணகியுடன் அவள் தந்தையில்லில் வளர்ந்தவள். அவளும் கண்ணகியைப்போலவே தன் கொழுநனைப் பிரிந்து வாழ்பவளெனினும், அவளைப்போல் இவள் நீடுநினைந் திரங்கி நெஞ்சம் புண்ணுதலில்லை. அதனால் இவள் நிறையிற் சிறிது குறைந்தவளாவளோ என எவரும் நினைத்தல் ஒண்ணாது. மற்றுப் பாசண்டச்சாத்தன் என்னும் ஓர் தேவனே ஓர் காரணத்தால் மாநுடவடிவம் பூண்டு இவளுக்குக் கணவனாயமைந்தான். அவன் சிலகாலம் தேவந்தியுடன் கூடிவாழ்ந்து, ஓர் நாள் தன் உண்மைநிலையை அவளுக்குக்கூறி, "அன்பே! நீ இனியென்னைக் காணல் வேண்டின் எனது கோட்டத்து (கோயில்) வந்துசெல்" எனக்கூறி, மற்றவரிடத்தே "யான் தீர்த்தத் துறைபடிய யாத்திரை போகின்றேன்" எனமொழிந்து மறைந்தான். அன்றிருந்து தேவந்தியும் தீர்த்தயாத்திரை சென்ற தன் கணவன் மீண்டும் விரைவில் வந்து சேரல்வேண்டிப் பாடுகிடப்பாள்போல் பாசண்டச்சாத்தன் எனும் ஐயனார்கோட்டம் போந்து, அறுகு சிறுபூளைப்பூ நெல்முதலிய தூவி "என்தலைவி கண்ணகி தன் கொழுநனைப்பெற அருள்புரிதல்வேண்டும்" எனக் குறையிரந்துவந்தாள். இங்ஙனம் குறையிரந்து வந்ததோழி (கண்ணகி கனவுகண்ட) அன்று கண்ணகியை விளித்து, "அன்னாய், நீ விரைவில் உனது கண

வனைப் பெறுவை" யென ஆசிகூறினாள். அதுகேட்ட கண்ணகி "உயிரனையாய்! ஏழைபால் பரிவுபூண்டு நீ கூறிய நல்லுரை பொய்க்காதென்பது ஒருதலை. எனினும் எளியேனென் பேதைநெஞ்சம் ஐயுற்றலமருகின்றது. ஆ! பாவியேன் உனக்கும் உற்றதுரையாது மறைத்தேன். அது எனக்கு நன்மையன்றித் தீமை பயப்பதாகத் தோற்றினமையின் நின்பாற் கூறிலேன்."

தேவந்தி:—செல்வி! செல்வமுளகாலை உன்னோடுடனுறைந்து, அல்லற்காலை நின்னிற்பிரிந்து ஒளிப்பவள் யானேயோ? நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை யென்பர்; மற்றது நின்பால் இன்று கண்டேன்.

கண்ணகி:—கலக்கமுற்று வருந்துமென் னெஞ்சம்; மற்றதனால் மதிபிறழ்ந்து நின்பாற் கூறாதொளித்ததன்றி வேறன்று. தோழி! நெருநலிரவு ஓர் கனவு கண்டேன். நம்மைப்பிரிந்தகன்றுள்ள நம் தலைவர் என்னை மட்டும் தன்னொடு அழைத்துக்கொண்டு ஓர் பெரும் பதிக்கட்புக்கார். ஆங்கே எம் நிலைமைக்கேலாதவொரு சொல்லை இடுதேளிட்டாற்போன்று (பொய்த்தேளை மேலேபோடல்) எம்மீது சுமத்தினர். அதனால் எனது ஆருயிரனையார்க்கு ஓர் தீங்குற்றதெனப் பிறரால் அறிந்து, தமியளாய்ச் சென்றறியாதேன் வெளியே சென்று, மற்றெவ்வாடவர் முன்னின்றும் பேசியறியாதேன் அவ்வூர் மன்னனிடம்போந்து வழக்குரைத்தேன். பின்னர் அம்மன்னனொடு அவ்வூர்க்கும் தீங்கு நிகழ்ந்ததாகக் கண்டேனாதலின் நின்பால் உரையேன். அதன் பின்னர் நிகழ்ந்தசெய்தியை யுரைப்பின் நினக்கது நகையூட்டும்.

தேவந்:—பொற்றொடி! நீ உனது கணவனால் வெறுக்கப்பட்டாயல்லை. அங்ஙனமாக நீ கண்ட கனவினால் கலக்கமுறுதல் வேண்டா. முற்பிறப்பிலே உன் கணவன்பொருட்டு நீ புரிதற்குரிய ஓர் நோன்பு தவறினாய். அத்தவறே இங்ஙனம் நிகழ ஏதுவாயிற்று. காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகத்துறைக்கு அருகேயுள்ள கடற்கரைச்சோலையிலே சோமகுண்டம் சூரியகுண்டம் என இருபொய்கைகள் உள்ளன. அவற்றில் நீராடிக் காமவேள் கோட்டம்போந்து வணங்கின் இத்தீங்கு ஒழிந்து, இப்பிறவிமுழுதும் நின் கணவனொடு சேர்ந்து இன்பந்துய்த்தலன்றி, சுவர்க்கத்தினும் உன் தலைவனைப் பிரியாது போகந் துய்க்கலாம். ஆதலின் நாம் ஆண்டுச்சென்று அவற்றில் மூழ்கிவருவோம்.

கண்ணகி:—தோழி, இங்ஙனம் துறைமூழ்கித் தெய்வந்தொழுதல் எனக்கு ஒவ்வாது. கற்புடையார்க்குக் கணவனன்றிப் பிறிதொரு தெய்வமுமுளதோ?

இவ்வாறு இக்கன்னியரிருவரும் உரையாடிக்கொண்டிருக்கக் கதிரவன் பொன்னிறக் கதிர்களோச்சிக் குடகடலுள் மறைந்தான். பெண்கள் தத்தம் மனைகளில் விளக்கேற்றிவைத்து முல்லைநன் மலரையும் நெல்லையும் தூவி இறைவனைத் தொழுதனர். அதுபொழுது ஓர் பணிப்பெண் அச்செல்வியரிடத்தே வந்து, "அன்னாய், நம் தலைவர் இதுபொழுது நம்வீட்டின் முற்றத்தே வந்து நிற்கின்றார்" என்றனள். அவ்வளவில் கோவலன் ஆண்டுப் போந்து, கண்ணகியின் மேனிவாட்டத்தைக் கண்டு "ஆருயிரே! பொய்யை மெய்போலக் காட்டியொழுகும் பரத்தையொடு கூடிவாழ்ந்த பாவியேன் நம் முன்னோர் தேடிவைத்த பொருட்குவியலையெல்லாம் தொலைத்ததோடு, ஐயோ, உனக்கும் தாங்குதற்கரிய பெருந்துயர் உறுவித்தேனே" என மனம் வருந்திக் கூறினான். மணந்த சில வாண்டில் தன்னைப் பிரிந்து, நாடகமகளையே தஞ்சமென அடைந்து, தன்னை முற்றிலும் மறந்துவாழ்ந்த தன் கணவன் தானே வலியவந்து தன்முன் காட்சியளித்ததைக் கண்டதும் கண்ணகிக்கு உற்ற மகிழ்ச்சிப்பெருக்குக் கூறுந் தரத்ததன்று. "மாதவிக்கு வழங்கப் பொருள் சிறிதும் இல்லாமையோ என் ஐயன் ஈண்டு அடைந்தது?" என்னும் ஐயம் அவளுக்கு உதித்தது. எனினும் தன் கொழுநனைக் கண்டதே வரம்பிலாப் பேரின்பந் துய்த்ததுபோலாயிற்று. "ஐய! எளியேனென் சிலம்பு இன்னும் இரண்டுள. அவற்றை யேற்றருள்க" எனப் புன்னகைபுரிந்து இன்னுரை புகன்றாள் கற்பிற்சிறந்த கண்ணகி. "அன்பே! இச் சிலம்பையே வாணிபமுதலாகக் கொண்டு யான் முன் தொலைத்த பொருளனைத்தும் ஈட்ட நினைத்துள்ளேன். தன்னுயிரைப்போல் மன்னுயிர்புரக்குந் தென்னவன் இருந்து அரசாளும் மதுரையம்பதியே அதற்கு ஏற்ற இடமெனக் கருதுகின்றேன். ஆருயிரே, நீயும் என்னொடுவர வேண்டுகின்றேன்" என்றான் கோவலன். கணவனையன்றிப் பிற கடவுளரையும் மனதிற் கருதாத கண்ணகி அவன் விருப்பிற்கு ஒருப்பட்டாளென நாம் கூறல் மிகை.

* * * *

மதுரை செல்லும் காதலர்க்கு
மாதவமுதியோள் வழித்துணை யானது.

கோவலனும் அவன் ஆருயிர் மனைவியும் அன்றைய கடையாமத்தே பிறரெவரும் அறியாவாறு தம்மனையினின்று நீங்கி, அரவணைமீது அறிதுயிலமர்ந்த ஆழிநீர்வண்ணன் கோட்டம் வலம்வந்து, அசோகமரத்தின் அணிதிகழ்நீழலில் அருகக்கடவுளுறையும் விளங்கொளிச் சிலாதலம் வலங்கொண்டு வணங்கி, போதினீழற் புனிதனாலயமேழினையுங் கண்டுவணங்கிச் சென்றார். சென்றவர்கள் காவிரியின் வடகரைவழியே மேற்றிசைநோக்கி ஒருகாவததூரம் போந்து ஆண்டுத்தங்கினர். வழிநடைத்துயரால்திருமுகத்தே சிறுவியர்வரும்ப நுண்ணிய இடையும் மெல்லிய அடியும் நோவ, அதனால் குறுகவுயிர்த்த கண்ணகி அதனைப்புறத்தே காட்டாது, தன்கொழுநனை விளித்து, "அன்ப, மதுரைமூதூர் யாது?" எனப் புன்னகைதவழ முற்றாத மழலைச்சொற்களால் வினவினள். கோவலன் அவளது நிலையையறிந்து வருந்தினன்எனினும், மனந்தளர்வுறாது, முப்பது காதமென மொழியின் அவள்துயர் மிகுமெனக்கருதி, "செவ்வி, இனி மதுரை சேய்மையன்று; ஐந்தாறு காதமே உள்ளன" எனக்கூறினன். அவர்கள் தங்கியிருந்த அவ்விடத்தே கவுந்தியடிகளென்னும் ஓர் ஜைனசந்நியாசினியின் ஆசிரமம் இருந்தது. அவர்கள் அவ்வாசிரமம்போந்து அடிகளைத்தொழலும், அவ்வம்மையார் "பூமிசை நடந்த நான்முகன் திருமொழி தவறா நோன்பினையுடையீர்! தீவினையாளரைப்போலே நும் இருப்பிடம் நீத்து வருவ தெதுகருதி?" என வினவினர். "மாபெருந்தவத்தீர்! யான் கூறத்தகுவதொன்றுமில்லையெனினும், பொருள்தேடும்பொருட்டு மதுரைசெல்லும் அவாவுடையேன்" என்றான் கோவலன். "பூங்கொடியனைய இவள் பருக்கைக்கற்கள் பரவியவழியை யெங்ஙனம் கடப்பள்? மதுரை சேறல்வேண்டுமென்னும் உம் விருப்பை யான் தகையினும், நீவிர் தளராவுறுதியுடையோர்போலக் காண்கின்றீர்! அருகதேவ னாகம

முணர்ந்த மேலோரிடத்தே அவ்வாகமப் பொருள் கேட்டல் வேண்டுமென்னும் நினைவு எனக்கு முன்னரேயுண்டு. அதனால் யான் இதுபொழுது மதுரை போகின்றேன். நீவிரும் என்னொடு வம்மின்" என்றார் அவ்வம்மையார். "இன்றேயென் உயிரனையமனைவியின் துயர் கழிந்தது" எனக்கூறி மகிழ்ந்தான் கோவலன். பின்னர், கவுந்தியடிகள் ஐயக்கடிஞையும் மயிற்பீலியுங் கையகத்தேந்தி, அவ்விருவரையும் உடன்கொண்டு அருகதேவன் பஞ்சமந்திரமே தமக்கு வழித்துணை யாவதெனக்கூறி மதுரைநோக்கி நடந்தார். நாளொன்றிற்கு ஒரு காவதமாக மணநாறும் மலர்க்காவும், மாபலாவின் செழுங்காவும் இடையிடையேபெற்ற பலவூர்களைக்கடந்து, மைந்நிறவண்ணன் ஐவாயரவில் அறிதுயிலமரும் அரங்கமடைந்தனர். ஆங்கே சமணமுனிவர் இருவர் எதிரே வந்துதோன்ற, அன்னார்தம் மலரடியைத் தம்சென்னிமீதிருத்தி "எம்பழவினை யின்றே கழிந்தது" என மகிழ்ந்தனர். பின்னர் அம்முனிவரால் அறவுரைகேட்டுக் காவிரியின் வடகரைநீங்கித் தென்கரையெய்தி, உறையூரிலே அன்றிராத் தங்கினர்.

* * * *

மதுரைப் பெருவழி

மறுநாள் பொழுதுபுலரா முன்னரே உறையூரினின்றும் நீங்கி, அவ்வூர்க் கருகேயுள்ள வோர் சோலையை யடைந்தனர். அடைந்தவர்கள் அதுபொழுது குடகமலைப்பக்கத்தே மாங்காடென்னும் ஊரிற் பிறந்த வோரந்தணர் மதுரையிலிருந்து, நான்மறைக்கும் தேவரறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங்கண்மால், மற்றவ்விண்ணவரும் மண்ணவரும் தன்னை யெளிதே வந்தடைந்து இனிது நனி உய்யுமாறு ஆற்றிடைக்குறையிலே பள்ளிகொண்ட கோலத்தையும், விண்தொடநிவந்த வேங்கடமலையின்மீது நின்ற திருக்கோலத்தையும் காண விழைந்துவருபவரால் மதுரைக்கு எளிதிற் செல்லத்தக்க வழியறிந்து சென்றனர். கதிரவன் மேற்றிசைமறைய வழியிடையேயுள்ள வோர் ஊரில் அன்றிரவு தங்கி, மறுநாள் வைகறையில் மதுரைப்பெருவழி நடந்தனர். கண்ணகி பகலவன் வெம்மையால் நாவுலர்ந்து நடக்கவியலாதுசோர்வதைக் கண்டகோவலன் அவளையும்கவுந்தியடிகளையும்ஆங்கே ஓர் நீழலின் இருத்தி, நீர் கொணர அருகேயுள்ளவோர் பொய்கையை யடைந்தான். அதுபொழுது மாதவியின் தோழியாகிய வயந்தமாலை கோவலன்முன் தோன்றி, அவனடியில் வீழ்ந்து கண்ணீருகுத்துப் பின்வருமாறு கூறலுற்றாள். "ஐய, என் தலைவி 'மணநாறுந் தாழைமடலிலே யானெழுதியமுறையில் எவ்வகைத் தவறுமில்லை; மற்றவர்பால் நீ கூறியதில் தவறுண்டுபோலும்; அதலாலன்றே எனதன்பர் என்னை மறந்தார்; அந்தோ! ஆன்றோரால் வெறுத் தொதுக்கப்பட்ட இவ் வேசையர்தொழில் மிகமிக இழிந்தது' எனக்கூறி, முத்துக்கள்போல நீர்துளிப்ப வருந்தி, தன் கழுத்திற்பூண்ட முத்துவடத்தைப் பறித்தெறிந்து அந்தோ! துறவாத என்னையும் துறந்தனள். எளியேன் செயலற்று வருந்தி, நீங்கள் மதுரைமூதூர் நோக்கிப் போந்ததனை யறிந்து, வாணிகஞ் செய்வோர் கூட்டத்துடனே தனியேபோந்து ஈண்டடைந்தேன். குணமாண்டோய், நின் திருவுள்ளம் யாதோ?". எதிர்பாராவகையில் தோன்றிய இவள் மாதவியின் தோழியாவளோ எனஐயுற்ற கோவலன், முன்னே தனக்குவழியறிவித்த அந்தணரால் 'இப்பெருங்கானிடையே செல்வோரைத் துன்புறுத்தும் இயக்கியொருத்தி யுளள்'என அறிந்தவனாகலின், இவள் அவ்வியக்கியா மற்றவ் வயந்தமாலையேயா என்பதையறிய'அந்தரி மந்திரம்'ஓதினான். அவ்வளவில் அவள், தான் ஓர் இயக்கியென்றும், இவ்வனத்தி லுறைபவளென்றும், தான் புரிந்த இத் தவறை மன்னித்தருளல் வேண்டுமென்றுங் கூறி மறைந்தாள். பின்னர்க் கோவலன் கண்ணகியையடைந்து, அவள் நீர்வேட்கையைத் தீர்த்ததும் மேலே நடக்கலுற்றனர்.

தமிழ்ப் பாடம் 133.

[610-வது பக்கத் தொடர்ச்சி]

நைடதம்—நளன் தூதுப் படலம்

திருத்தகு செவியிடைச் சிவையி னூடுற
வுருக்கிய செம்பினை யூற்றி னாலென
மருத்துவன் றீமொழி கேட்டு மன்னர்கோன்
கருத்தழிந் தாருயிர் கலங்கி னானரோ. 24

(உரை) மன்னர் கோன் - அரசர்க்கு அரசனாகிய நளன், மருத்துவன் - இந்திரனது, தீமொழிகேட்டு - கொடிய வார்த்தைகளைக்கேட்டு, திருத்தகு - அழகிற் சிறந்த, செவி இடை - காதில், சிவையின் -கொல்லனது உலையின்மூக்கில், ஊடுற - உள்ளேபொருந்த, உருக்கிய செம்பினை - உருக்கிய செம்பை, ஊற்றினால் என - ஊற்றியதுபோல, கருத்து அழிந்து - நினைவு அழிந்து, ஆர் உயிர் கலங்கினான்-அருமையான உயிர் கலங்கலானான். (அரோ - அசை).

குறிப்பு:—காய்ச்சியசெம்பினைச் செவியில்விட்டால் அதன் பயனாய வருத்தம் எத்தனையோ அத்தனை துன்பம் இந்திரன்மொழி விளைத்தது என்று காய்ச்சியசெம்பிற்கும் இந்திரன்சொல்லிற்கும் பயனால் ஒப்புமை தோன்றச் சேர்ப்பதால் இது பயனுவமையணி. (1-449).

குருமணி மேகலைக், குவளைக் கண்கொலோ
பொருமதன் பகழியோ பொய்ம்மை தீதெனுந்
தருமமோ வுயிர்நிலை தளர்ந்து வாடுமென்
மருமமீ தூன்றிய வாளிற் போழ்வதே. 25

(உரை) குரு - நிறம்பொருந்திய, மணி - இரத்தினங்களிழைத்த, மேகலை - மேகலை என்னும் ஆபரணத்தையணிந்த தமயந்தியின், குவளை - நீலோற்பலம் போன்ற, கண்கொலோ-கண்களோ? (அல்லது) பொரு - போர் செய்கின்ற, மதன் - மன்மதனுடைய, பகழியோ - அம்புகளோ? (அல்லது) பொய்ம்மை - உரைத்தமொழியிலிருந்து பிறழ்தல், தீது எனும் - பாவம் என்னும், தருமமோ - அறமோ? (இவைகளில்

எது), உயிர்நிலை தளர்ந்து - உயிர்நிலையானது நெகிழ்ந்து, வாடும் - வாடுகின்ற, என் மருமம்மீது - என்னுடைய மார்பின்மீது, ஊன்றிய - அழுத்திய, வாளில் - வாளைப்போல், போழ்வது - இப்பொழுது பிளக்கின்றது, (அறிகிலேனே என்று நளன் தன்னுளே எண்ணி எண்ணி நைகின்றான்).

விரிவுரை:—ஆவிசோர்ந்தனன் நளன். மார்பிலே ஏதோ வாளைப்போல் அழுத்திப்பிளப்பதொரு துன்ப உணர்ச்சி அவனுக்கு உண்டாகின்றது. ஆனால் அவ்வாறுபிளப்பது ஒன்றும் அவன்கண்களுக்குத் தோன்றாதாகையால், யாவதாய் அது இருத்தல்கூடுமென்று ஐயுறுகின்றான். அச்சமயம் தன் கண்ணிற்குத் தென்படாமல் மார்பைப் பிளக்கவருவது, தமயந்தின் பார்வை, மன்மதன் பாணம், மெய்ம்மைத்தருமம், ஆகிய இம்மூன்றினில் ஒன்றாயிருக்கவேண்டும்என்று அவன் ஆராய்வதாகக் கூறுகின்றது இச்செய்யுள்.

இந்தப் பொருந்தாத் தூதுத்தொழிலில் போய்த் தான் தமயந்தியின்முன் நிற்கவும், ஈதுணராத அவள் காதலால் தன்னைக் காணவந்தனன் என்ற களிப்பினோடு முகமலர்ந்து நோக்குங்கால் 'தமயந்தி, நீ இந்திராதியரை மணக்கவேண்டும்' என்று கூறியவுடன், திகைப்பும் நாணமும் ஒருபடி வெகுளியும், யாவற்றிற்கும் மேல் துன்பமும் கலந்த நிலையினளாய் யாது முரையாமல், "அரசே, ஒத்தகாதலால் மணப்பான் வந்தனை என மகிழ்ந்த பேதையேன் யான் கையறவெய்தி மாழ்க என்னைப் பிறர் வயமாக்குதல் உனக்கேனு மெனக்கேனும் பெருமையாமோ; கொடியோய் இது தகவோ" என்னும் பொருள்பட அவள் பிற்றை நாள் தன்னைப் பார்க்கவிருக்கும் பார்வையைத் தன்மனத்தினால் நினைக்க, அம்மனத்தோற்றமே இப்பொழுது நளனுடைய மார்பைப் பிளக்கின்றதென்பது முதலடியின் கருத்தாகும். அநங்கன் எய்யும் பாணமும் கண்ணுக்குத் தோன்றாதாகையால் அதுதான் பிளக்கின்றதோ என்று காதலின் மிகுதியால் விளம்புகின்றான். பிறகு "இத்தூதிற் குடன்படேன் என மறுத்தாலென்" என்றவோர் நினைவுதூண்ட உடனே, "இவர் கேட்குமிது நெறியலதாயினும் சொன்ன சொல் மறுத்தல் எஞ்ஞான்றும் அறமன்று' என்னும் நீதியை நினைத்து, "ஐயோ, என் வாய்மை வண்மை என்னும் அறங்களுக்கே யானின்று வாளா ஆளாகவோ" என மாழ்கினன் என்பது மூன்றாவது அடியின் கருத்து.

கண்ணோ, பகழியோ, தருமமோ வாள்போல் போழ்கின்றது என உரைக்கும் இது ஐயவணி ஆகும். ஒன்றினைக்குறித்து அதுவோ இது என்னும் சந்தேக வாசகத்தால் செப்புவது ஐயஅணியின் இலக்கணம். "குவளையோ கயலோ வண்டோ இவள் முகத்தில் பிறழ்வதே" என்று ஒருத்தியின் கண்ணை வருணிப்பதாயின் அது ஐயஅணி. இதனையே, "இவள் கண்கள் குவளையைப்போலும், கயலைப்போலும் வண்டைப்போலும் இருக்கின்றன" என்போமாகில் இது உவமைஅணி ஆய்விடும். உண்மையில், ஐயஅணி, உவமையணியின் ஒருவகையேயாகும். கயல்போல, குவளைபோல வண்டுபோல என,போல முதலிய உவம உருபு ஒன்றும் கொடுக்காமல் அதற்குப்பதிலாய்க் கயலோ குவளையோ வண்டோ என ஐயப்படும் வாசகத்தில் உரைப்பதொன்றே வேறுபாடன்றி இறுதியில் கயல் குவளை வண்டு ஆகிய இவைகளைப்போல் அவள்கண்கள் இருந்தன வென்பதே அவ்விருவகை வாசகங்களின் ஒரே கருத்தாகும். ஆகையால் ஐயஅணியை ஐய உவமையணி என்றுங் கூறலாம். ஐயவணியை, வடமொழியில் சந்தேகாலங்காரம் என்று கூறுவர். ஐயவணியும், பிராந்திமதாலங்காரம் என்னும் மயக்க அணியும் இருபொருள்களுக்குள்ள ஒப்புமையைக் குறிக்கும்வகையில் ஒக்குமெனினும் இவ்விரண்டிற்கும் வாசகஅளவில் சிறிது பேதமிருக்கின்றது. இதுவோ அதுவோ என ஐயப்படும் வாசகத்தால் ஒப்புமையைக்குறிப்பது ஐயஅணி. இதுதான் அது என்னும் நிச்சயவாசகத்தால் ஒப்புமைதோன்ற அமைப்பது மயக்கஅணி. வானத்தில் எழுந்த முழுமதியைத் தீம்பால் கவளமென நினைத்து வேங்கடமலையிலுள்ள யானைகள் தம்துதிக்கையை நீட்டின (2-571)என அஷ்டபிரபந்தத்தில் வந்திருப்பதும், தாமரைமலரென்றெண்ணி மாதர் தம் முகத்தில் வண்டுகள் பாய்ந்தன வென்று நளவெண்பாவில் (1–547) வந்திருப்பதும் மயக்கஅணி யாகும். ஒன்றற்கொன்று உவமையாவதை இவ்விதம் மயக்கவாசகத்தில் கூறுவதால்அதனை மயக்க உவமைஅணி என்றும் அழைக்கலாம்.

இவ்வண்ணம் ஒப்புமைகாட்டும் குறிப்பினால் வருவதன்றியும் ஒருபயனை விளைவிக்கவல்ல இரண்டு மூன்று காரணங்களும் ஒருங்கேயிருந்தன என்று சேர்த்துச் சொல்லவேண்டும் நயத்தையும் 'இதுவோ அதுவோ' என வேறுபடுத்துவதுபோன்ற வாசகத்தால் சாதிக்கலாம். இந்தச்செய்யுளில், கண்ணும் பகழியும் தருமமும் எல்லாம் சேர்ந்து நளனது மார்பைப் பிளக்கின்றன என்பது பொருளாயிருக்க, அவைகளில் 'எதுவோ' என்னும் வாசகத்தால் அப்பொருள் சாதிக்கப்படுகின்றது. "அரக்கர் செய்தபாவமோ, அல்லது நல்லவர் செய்ததவமோ, கூனிவந்து தோன்றினள்'; என்னுமிடத்தில் அவர் பாவமும் இவர் தவமும் ஆகிய இவ்விரண்டும்சேர்ந்து கூனியின் தோற்றத்திற்குக் காரணமாயின என்னும்பொருளை ஐயவணி எய்துவிக்கின்றது.

குறிப்பு:–மணிமேகலை, என்பது மணிகளால்இழைக்கப்பெற்ற மேகலையை அணிந்தவள் என்று இடையிலும் கடையிலும் விரியுமாகையால், மூன்றாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

குவளைக்கண், என்பது குவளைபோன்ற கண் என விரியும். ஆகையால் உவமத்தொகை. வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது.

வாளில், என்பதிலுள்ள 'இல்' என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு; ஒப்புப்பொருளது.வாளைப்போலப் பிளப்பது என்பது அதன் பொருள்.

பொய் + மை = பொய்ம்மை:–குறிலிணைந்த யகரமெய்யோடு மைஎன்னும் உருபு புணரும்போது அம் மெல்லினமெய் மிகுந்தது (3—570)

என்னும்விள் ளாதயர்ந் திருக்கு மேமுறுந்
தன்னையு மறக்குமெய்த் தரும நன்றெனப்
புன்னகை கோட்டுமெய் புழுங்கும் வெய்துயிர்த்
தன்னமுன் னுரைத்தவை யனைத்து மெண்ணு
[மால் 26.

(உரை). என்னும் - என்று சொல்லிக்கொள்வான். விள்ளாது - ஒன்றும்பேசாது, அயர்ந்து இருப்பான்-

சோர்ந்திருப்பான். ஏம் உறும் - வருத்தப்படுவான். தன்னையும் மறக்கும் - தன் நினைவையே மறந்துவிடுவான். மெய்த்தருமம் நன்று எனா - 'என்னுடைய வாய்மை விரதத்தால் விளைந்த இவ்விபரீதம் வெகு நன்று, வெகுநன்று' என்று; புன்னகைகோட்டும்-புன்சிரிப்புக்கொள்வான். மெய்புழுங்கும்- உடல் வெதும்புவான். வெய்துயிர்த்து - பெருமூச்சுவிட்டு, அன்னம் முன் உரைத்தவை அனைத்தும் - தமயந்தியின் அழகு பெருமை காதல் முதலியவைகளைப்பற்றி முன் அன்னம் உரைத்துள சொற்களையெல்லாம், எண்ணும் - நினைத்துக்கொள்வான். (ஆல் - அசை).

குறிப்பு:—என்னும், இருக்கும், மறக்கும் முதலியவை, என்பான், மறப்பான், என்ற பொருளுடைய ஆண்பாற்படர்க்கை வினைமுற்றுக்கள். செய்யும் என்னும் இந்தவாய்பாட்டு வினைமுற்று, வழக்கத்தில், குதிரை ஓடும், புலிபாயும் என ஒன்றன்பாற்படர்க்கையிலே பயிலப்பெறுகின்றதாயினும், இராமன் சிரிக்கும் சீதை இயம்பும், கிளி பேசும், பறவைகள் பறக்கும், எனப் பலர்பால்தவிர மற்ற நான்குபால் படர்க்கையிலும் வரலாம். நாம் வரும், நீ கொடுக்கும், புலவர்கள் பாடும் எனத் தன்மையிலும் முன்னிலையிலும் பலர்பால் படர்க்கையிலும் இவ்வாய்பாட்டு வினைமுற்று வராது (1–408).

இலக்கணம்.

சிற்சில சிறப்புவிதிகளைத் தவிர மற்றபடி பொதுவாக, வருமொழிமெய்யோடு புணர்கிற உயிரீற்றிற்கு ஒத்து நடப்பதால் யகர ரகர மெய்யீறுகளை முதலில் எடுத்துக்கொண்டோம். இனி மகர மெய்யீற்றை எடுத்துக் கொள்ளலாம். மகர மெய்யீற்றுச் சொற்கள் வருமொழிமுதல் உயிரோடு புணர்வதற்குரிய விதிகள் நினைவில் இருந்தால் அது வருமொழி முதல் மெய்யோடு புணர்கின்ற விதிகளைக் கற்பது எளியதாகும்.

C. மகரமெய்யீறு.

I மகரமெய்யீறு + மெல்லினமெய்ம் முதல்.

மெல்லினமெய்களில் மொழிக்குமுதலில் வரக்கூடியன, ஞகர நகர மகரங்கள். ஙகரம் அங்ஙனம் இங்ஙனம், எங்ஙனம், எனச் சுட்டெழுத்துடனும் வினாவெழுத்துடனும் மாத்திரமே சேர்ந்துவரும்.

(1) நிலைமொழி யிறுதியில் மகரமெய் நிற்க வருமொழிமுதலில் ஞகர நகர மகரங்களாகிய மெல்லின மெய்கள் வருமாயின் எல்லாத்தொடர்களிலும் மொழியிறுதியில் நின்ற அம் மகரமெய் கெட்டுவிடும்.

பறக்கும் + ஞிமிறு = பறக்குஞிமிறு—
பெயரெச்சத்தொடர்

புலியும் + ஞமலியும் = புலியுஞமலியும்—
இடைச்சொற்றொடர்

தாளம் + நகை = தாளநகை—உவமத்தொகை

மாடம் + நிடதம் = மாடநிடதம்—இரண்டாம் வேற்றுமை
உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

மனம் + நெகிழ்ந்தது = மனநெகிழ்ந்தது—
எழுவாய்த் தொடர்

பூகம் + மடல் = பூகமடல்-ஆறும்வேற்றுமைத்தொகை

பதுமம் + முகம் = பதுமமுகம்—உவமத்தொகை.

மருதம் + நிலம் = மருதநிலம்—பண்புத்தொகை.

குளம் + நோக்கினன் = குளநோக்கினன்—
இரண்டாம் வேற்றுமைத்தொகை

(2) நிலைமொழி நும் தம் எம் நம் என்னும் இந்நான்கு சொற்களி லொன்றா யிருக்குமாயின், வருமொழிமுதலில் மகரம் வரினும் அந் நிலைமொழியீற்று மகரமெய் கெடாது—

நும் + மாலை = நும்மாலை. எம் + முகம் = எம்முகம்.
தம் + மானம் = தம்மானம். நம் + மனம் = நம்மனம்.

(3) எம் நம் தம் நும், என்னும் இந்நான்கு சொற்களுக்குப்பின் வருமொழிமுதலில் ஞகர நகரங்கள் வருமாயின் நிலைமொழியீற்று மகரமெய்யும் அஞ்ஞகர நகர மெய்களாகத் திரியும்:—

எம் + நலம் = எந்நலம், நம் + நேயம் = நந்நேயம்.
தம் + நிலம் = தந்நிலம், நும் + நகை = நுந்நகை.
எம் + ஞாண் = எஞ்ஞாண், நம் + ஞாலம் = நஞ்ஞாலம்.
தம் + ஞேயம் = தஞ்ஞேயம், நும் + ஞமலி = நுஞ்ஞமலி.

189116

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி.

[612-வது பக்கத் தொடர்ச்சி]

1-ம் பத்து 10-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

பொருமா நீள்படை ஆழி சங்கத்தொடு
திருமா நீள்கழல் ஏழுலகம் தொழ
ஒருமா ணிக்கக் குறளாகி நிமிர்ந்தஅக்
கருமா ணிக்கம்என் கண்ணுள்ள தாகுமே.

அவதாரிகை:— இப்பாசுரம் திருவிக்ரமாவதாரத்தின் சுவரூப சின்னங்களைச் சொல்லுகின்றது.

பதவுரை:— பொரும் - யுத்தத்திற் குரியதான, மா நீள் - மிகவும் நீண்ட, படை - ஆயுதங்களான, ஆழி சங்கத்தோடு - சக்ராயுதம் சங்காயுதங்களோடு, திரு - மங்களகரமான, மா - பெரிதான, நீள்கழல் - பக்தர்கள் இருக்குமிடம் வரையில் நீண்டுவரும் திருவடிகளை, ஏழுலகம் தொழ - ஏழுலகங்களும் தொழும்படி, ஒரு மாணிக்கக் குறளாகி - ஆச்சரியமான சிறிய பிரம்மச்சாரி வடிவாய், நிமிர்ந்த - எல்லா லோகங்களையும் எட்டி நீண்ட, அக்கருமாணிக்கம் - நீலமாணிக்கம் போன்ற அந்தத் திருமால், என் கண்ணுள்ளதாகுமே - என் கண்களில் தோற்றி விளங்குகின்றான்:—

குறிப்பு:—முன்தசகத்தி னிறுதியில் தன் உச்சியில் எம்பெருமான் எழுந்தருளியிருப்பதாக அருள்செய்ததால் இங்கு அவன் தம் கண்களில் விளங்குகிறானென்கிறார். அங்ஙனம் விளங்குகையில் திவ்விய வடிவுடனும் தன் உருவத்திற்கு ஒப்புவாய்ந்த தீர்க்கமான

சங்குசக்ராயுதங்களுடனும் தோற்றியருளுகிருன் என்கிருர்.

2-ம் பாசுரம்.

கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில்
எண்ணிலும் வரும் என்இனி வேண்டுவம்?
மண்ணும் நீரும் எரியும் நல்வாயுவும்
விண்ணுமாய் விரியும் எம்பி ரானையே.

மண்ணும் நீரும் எரியும் நல்வாயுவும் விண்ணுமாய் விரியும் எம்பிரானை - பிரளயகாலத்திலே ஸூக்ஷ்மமாயிருந்து, சிருஷ்டிகாலத்திலே தன் மனவின் ஸங்கல்பத்தால் பூமியாயும் ஜலமாயும் நெருப்பாயும் ஆகாயமாயும் எல்லா உலகங்களாயும் தனக்குத்தானே விரிந்து விஸ்தாரமானவன், என் கண்களில் ஸ்திரமாக நிற்கின்றுன். காதன்மையால் தொழுதால் - என்னுடைய பரமபக்தியாலே யான் தொழுதபடியால், எண்ணிலும் - சந்தோஷமடையும்படி என் மனதிலும் விஞ்சித் தோன்றும்; இனி யான் வேண்டுவது ஏது இருக்கின்றது?

குறிப்பு:—இனி 2-ம் திருவாய்மொழி 9-ம் தசகத்தில் "நின் செம்மா பாதபற்புத் தலை சேர்த்தால்" வைகுண்டம்கூடத் தனக்கு வேண்டாமென்று "எம்மா வீட்டில்" அருளிச்செய்கிற இம்மஹாநுபாவன் வேறு என்ன புருஷார்த்தத்தை இங்கு அபேக்ஷிக்கப்போகிருர். தனக்குத் திருப்தி நிரம்பியதைக் கொண்டு தாம் ஆற்றி அவ் வெம்பெருமானது கலவியைச் சிலாஹித்துப் பேசுகிருர்.

மேல் 5-வது பாசுரத்தில் இக்கலவி தமக்கு நிர்ஹேதுவாகக் கிடைத்ததென்று புகழப்போகிருர்.

குறிப்பு:—எம்பெருமானது கிருபை நிர்ஹேதுவாகக்கிடைக்குமென்பதுதான் சாஸ்திரங்களின் துணிவு. சாந்தோக்கிய உபநிஷத்து இப்படியே ஓதுகின்றது. இதற்கு ஆதாரமானவை (1) பகவான் சுவயம் பிரபு (2) எம்மாண்பு பெற்ற தபசிகளாயிருப்பினும் மனிதன் செய்யவல்ல பக்தி வெகு சிறிது. பகவான் கொடுக்கும் பெரும்பயனே மிகப்பெரிது. ஒன்று தினைத்துணையும் மற்றையது பனைத்துணை யாகவுமிருக்க ஒன்றினை மற்றதற்குக் கைம்மாறு என்று சொல்ல வொண்ணுது. இது இப்படியிருப்பதால் மனிதர்கள், அதாவது பக்தர்கள், வாளாவிருந்தால்போதுமென்றும், பகவானே தாய்ப்பூனை தன்குட்டியைக் காத்து ரக்ஷிப்பதுபோல் யாதானும் ஒரு பிரயத்தனமும் நாம் செய்யாதிருக்க நம்மைக்காத்து அளிப்பானென்றும் சிலர்கொள்கின்றுர்கள். இதுசாஸ்திரவிரோதம். இம்மஹானுபாவன் இதைக் "காதன்மையால் தொழில்" அதாவது, பக்தியுடன் அவனுக்குத்தாவியகைங்கரியத்தைச் செய்துவந்தால் - அவன் "எண்ணிலும் வருவான்" என்று இந்தப்பாசுரத்தில் எடுத்து அருளிச்செய்கிருர். இப்படிக்கல்லாமல் உதாஸீனமாயிருக்குமவர்களுக்கும் அருள்கிடைக்குமென்றுல் ஈசனுக்குப் பக்ஷபாதமும், அதாவது ஒருவரைப்பற்றி அன்பும் ஏனையவரிடத்தில் தயையின்மையும், பிரஸங்கிக்கும். இதுபற்றியே சாஸ்திரம், மனிதன் செய்யும் பிரயத்தனம் அல்பமாயிருந்தாலும் இவன் செய்யவேண்டிய கடமைகளை, சாஸ்திரங்கள் பயன்பெற ("கர்த்தா சாஸ்திரார்த்தவத்துவாத்" என்று வியாஸபகவான் அறுதியிட்டிருப்பதால்) கடன் பூண்டே செய்தல் வேண்டும் என்று கற்பிக்கின்றது. பலன்கொடுப்பவன் பரிபக்குவ காலத்தை அறிந்து பயன்தருவான்; அப்பயன் இவன்எதிர்பார்த்து வருவதன்று. ஆழ்வார் மேல் ஐந்தாம் பாசுரத்தில் தன்நெஞ்சை விளித்து "நெஞ்சே, நீயும் நானும்பகவானை இப்பொழுதுகாணப்பெற்றேும். மனதால் அநுபவிக்கப் பெற்றேும். நாம் சிந்திக்காமலிருக்க நமக்கு இப் பெரும்பேறு விளைந்துவந்ததைப் பார்த்தாயே" என்று சந்தோஷிக்கிருர். இப்படி விளைந்துவருவது முன்செய்த நல்ல கர்மங்களின் பயனுக நேர வேண்டும்.

3-ம் பாசுரம்.

எம்பிரானை எந்தை தந்தை தந்தைக்கும்
தம்பிரானைத் தண் தாமரைக் கண்ணனைக்
கொம்பராவு நுண்ணே ரிடை மார்வனை
எம்பிரானைத் தொழாய் மட நெஞ்சமே.

பதக்குறிப்புகள்:—கொம்பு அராவு நுண் நேரிடை மார்வன் - வளைகின்ற கொம்பையும் சர்ப்பத்தையும் காட்டிலும் நுண்ணிய இடை (இடுப்பு) உள்ள மஹாலட்சுமியை மார்பில் தரித்திருப்பவன்.

தண்தாமரைக் கண்ணன் - சீதளமான தாமரைப் பூவின் இதழ்போன்ற திருக்கண்களை உடையவன். தம்மைப் பகவான் குளிரப் பார்த்தருளித் தப்பில்லாமல் எப்பொழுதும் அடிமையாக்கிக் கொண்டதை நமக்கு உணர்த்தும் நிமித்தம் தண்தாமரைக் கண்ணன் என்று அவனை ஆழ்வார் அழைக்கிருர்.

பொழிப்புரை:—"இப்படித் தம்மோடுகலந்தருளின எம்பெருமான், பிராட்டியும் தானுமாக எழுந்தருளியிருக்குமிருப்பையுந், தன் திருக்கண்களாலே தம்மைக் குளிரப்பார்த்தருள்கின்ற தன்மையையும் கண்டு பிரீதராய் எம்பிரான் என்றும் எந்தை தந்தை தந்தைக்கும் தம்பிரானென்றும் அவனை ஏற்றுக்கொண்டு தனக்குத் துணையாக எம்பெருமானைத் தொழாய் மடநெஞ்சே யென்று தம்முடைய திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிருர்."—ஆறுயிரப்படி.

4-ம் பாசுரம்.

நெஞ்சமே நல்லைநல்லை உன்னைப் பெற்றுல்
என்செய் யோம்இனி யென்ன குறைவினம்
மைந்த னைமல ராள்மண வாளனை
துஞ்சும் போதும் விடாதுதொடர் கண்டாய்.

பொழிப்புரை:—"இப்படித் தாமருளிச் செய்வதற்கு முன்பே தம்முடையதிருவுள்ள மவனுடைய திருவடிகளிலே விழுந்தபடியைக் கண்டுகந்து 'நல்லை நல்லை உன்னைப் பெற்றுல் நமக்கு முடியாததென்? இனி நமக்கு என்ன குறையுண்டு!' என்று தம்முடைய திருவுள்ளத்தைக்கொண்டாடி இனியொரு தேஹாவஸ்தையிலும் அவனை விடாதே" என்கிருர்.

5-ம் பாசுரம்.

கண்டாயே நெஞ்சே! கருமங்கள் வாய்க்கின்று ஓர்
எண்தானும் இன்றியே வந்தியலு மாறு,
உண்டானை உலகேழும் ஓர் மூவடி
கொண்டானைக் கண்டு கொண்டனை நீயுமே.

பதக்குறிப்புகள்:—உண்டானை - ஏழு உலகங்களை உண்டவனை - பிரளயகாலத்தில் வயிற்றில் வைத்து ரக்ஷித்தவனை, உலகேழும் மூவடி கொண்டானை- ஏழு

உலகங்களையும் மூவடியால் பலிசக்ரவர்த்தியினிடத்திலிருந்து அளந்து வாங்கிக்கொண்டவனை—உலகு என்னும் சொல் காகாக்ஷி ஞாயமாய் இருபக்கத்திலும் அந்வயிப்பது கண்டுகொள்க.

பொழிப்புரை:—"நல்லகாலம் வாய்க்கும்போது உலகங்களை உண்டானை, உலகேழுமோர் மூவடி கொண்டானை, நீயும் நானும் காணப்பெற்றேும், நெஞ்சே! நாம் சிந்திக்காமலிருக்கவும், பரிபக்குவகாலத்தில் வந்து இஷ்டபூர்த்திகள் விளைகிறபடி கண்டாயே! என்று தம்முடைய திருவுள்ளத்தோடு கூட அநுபவிக்கிருர்."—ஆறுயிரப்படி.

குறிப்பு:— இதன் தத்துவத்தை முன்னமேயே இரண்டாம்பாசுரத்தில் விளக்கியிருப்பதைக் கண்டுகொள்க.

6-ம் பாசுரம்.

நீயும்நானும் இந்நேர் நிற்கில் மேல்மற்றோர்
நோயும் சார்கொடான் நெஞ்சமே சொன்னேன்
தாயுந் தந்தையு மாய்இவ் வுலகினில்
வாயும் ஈசன்மணி வண்ணன் எந்தையே.

பொழிப்புரை:—நீயும் நானும் இப்படி ஒரு வண்ணம் எம்பெருமானைக் காணப்பெற்றேும். இனிநம்மை விடில் செய்வதென்னவெனில், நீயும் நானும் அவனை இவ்வண்ணம் விடாதே நிற்கில் ஸர்வாத்துமாக்களுக்கும் தாயும் தந்தையுமாய் யாவர்க்கும் ஈசனுய் ஆச்ரிதசுலபனுய் நம்மிருவரோடும் கலவிசெய்திருந்தவன் ஒருநாளும் நம்மைவிடான். நெஞ்சமே நீஎன்னை நம்பி இரு" என்கிருர்.—ஆறுயிரப்படி.

குறுந்தொகை

[615-வது பக்கத் தொடர்ச்சி]

குன்றியனுர்] 117 [நெய்தல்

களவொழுக்கத்துக்காலை அலரெழாமைப்பொருட்டு ஒருவழித்தணந்த தலைமகன் நெடுநாள் வாராதொழிய, பிரிவாற்ருது வருந்திக் கைவளை கழன்றுவிழும்படி உடல்மிகமெலிந்து வாடிய தலைமகளைத் தோழி "நீ இவ்வாறு வருந்துதல் நேரிதன்று. தலைவர் விரைவின் வந்திடுவார்; அவ்வாறு வாராவிடினும் நீ பொறுத்துஆற்றியிருத்தல் வேண்டும். இல்லாவிடின் மறை வெளியாகி அன்னை முதலியோர் உன்னை முனிவார்காண்" என்று கழறித் தேற்றவுந் தேருளாகி, "யான் எங்ஙனம் ஆற்றுவல்? காமநோயால் உடல் மெலியின் அதற்கு யான் என்செய்வது? கைவளை நழுவக்கண்டு பிறர் ஐயுற்று உண்மையை ஆராய்ந்திடாவண்ணம் வளைவிற்பாரிடம் எனது கைக்குப் பொருந்திய சிறு வளைகளை வாங்கி அணிந்து கொள்வேன்" என்று தனதாற்ருமை தோன்ற தோழிக்குச் சொல்லியது.

மாரி யாம்ப லன்ன கொக்கின்
பார்வ லஞ்சிய பருவர லீர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇயர், அண்டர்
கயிறரி பெருந்திறத் தழுந்துந் துறைவன்
வாரா தமையின் உம்மைச்
சிறியவு முளவீண்டு விலைஞர்கை வளையே.

(உரை). மாரிக்காலத்து (கூம்பிச்சாய்ந்த) ஆம்பற்பூவைப் போன்ற கொக்கினதுநோக்கை அஞ்சிய, துன்பம்மிகவும்வருந்துதலைச்செய்த நண்டு, தாழையின் வேரின்கீழுள்ள வளைக்குள் செல்லவேண்டிப் பரதர் (உலரவைத்த வலையின்) கயிற்றைஅறுக்கும்படியான மிக்க வலத்தோடு புகும் கடற்றுறையையுடைய தலைமகன் வாராதொழிவானுயின், இங்கே (வளையல்) விற்பாரிடம் நான் முந்தியணிந்த வளைகளினுஞ் சிறியனவாகிய வளைகள் உள்ளன; (அவற்றை வாங்கி நான் அணிந்திடுவேன்; நீ பயப்படாதே.)

பார்வல்- பார்த்தல், பார்வை, நோக்கம்-'பார்வலிருக்கை' என்பது, புறம், 3. ஈர்தல் - அறுத்தல் அல்லது பிளத்தல்; இங்கு அது போன்ற நோவினைச் செய்தல். கண்டல் - கண்டலென்னும் மரமுமாம். அளை -வளை. அண்டர் - பகைவர், இங்கே நண்டு மீன் முதலியவற்றுக்குப் பகைவரான பரதவர். அரிதல் - அறுத்தல். உம்மை-முந்தியகாலம்; முன்னை. 'வாரா தமையினு மமைக' என்பது வேறொரு பாடம். விலைஞர் கை - கை, ஏழாம்வேற்றுமை யுருபு.

உள்ளுறை உவமம்:—கொக்கு, தன்னைப் பிடித்துண்ணு வண்ணம் அதன் கண்ணிற் படாது ஒளிந்து கொள்ளும் பொருட்டு வளையினுட்புகும் நண்டு செம்படவர் உலரவைத்த வலையை அறுத்திடுவதைப்போல, தலைமகளின் தந்தையும் தமயன்மாரும் தனது களவொழுக்கத்தையறிந்து தன்னைப் பிடித்து ஒறுத்திடாவண்ணம் தனதூரகத்து ஒளிந்துறையச் சென்ற தலைமகன், தலைமகள் தன்னிடத்துவைத்திருந்த நேசபாசத்தையும், அறுத்தெறிந்துவிட்டான் என்பதாம்.

நன்னுகையார்] 118 [நெய்தல்

தலைமகன்பிரிவிடை வருத்தத்தோடு தனித்துறையுந் தலைமகள் அந்திமாலைப்பொழுது வந்தும் தலைவன் வாராமையைக் குறித்துத் தனது தோழியிடம் துயருற்றுரைத்தது.

புள்ளு மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நாரின் மாலை,
பலர்புகு வாயி லடையக் கடவுநர்
'வருவீ ருளிரோ?' எனவும்
வாரார், தோழி,நங் காத லோரே.

(உரை). (இரைதேடிச்சென்ற தந் துணை மீளாமையின்) பறவைகளும் விலங்குகளும் தனிமையாகிய வருத்தத்தோடு தங்கும்படி நள்ளென்ற ஒலியோடு வந்த அன்பற்ற மாலை நேரத்தில், பலரும் புகும் (மதிலின்) வாயிலைச் சாத்துவோராகிய காவலாளர், 'நாம் கதவைச்சாத்தப் போகின்றேும்; உள்ளே வருபவர் யாரேனும் உளீரோ' என்று கூவியழைப்பதைக் கேட்டும், தோழி, நங்காதலர் வந்திலர். (இனி யான் என்செய்வேன்?)

புலம்பு - (1) தனிமை (2) வருத்தம்; இங்கே தனிமையும் வருத்தமுமாகிய இரண்டும். நள் - ஓ ரொலிக்குறிப்பு. நார் - அன்பு; துணைபிரிந்து தனித்துறைவாரை வருத்துந் தன்மைபற்றி 'நாரில் மாலை' என்றுள்.

தாழ்துணை துறந்தோர் தனித்துய ரெய்த
* * *
மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென
(சிலப் - அந்தி-13)

என்றுர் பிறரும். பலர்புகு வாயில் - பல ருள்ளே புகுதற்கொத்த பெரிய வாசல். அடையக் கடவுநர் - அடைபடும்படி கதவை மூடுவோர்; மாலைநேரத்தில் நகரின் புறத்துள்ள மதிலின் வாசலைக் காப்பவர் குறிப்பிட்ட நேரத்தில் அதை மூடுவதும், மூடுவதற்கு முந்தி 'உள்ளே வருவோர் யாரேனும் வெளியே இருப்பின் உடனே உள்ளே வாருங்கள்' என்று கூவியழைப்பதும் வழக்கமாயினும், குன்றக் குறவர் குறிச்சிக்கு இஃதேலாமை உணர்க.

சத்திநாதஞர்] 119 [குறிஞ்சி

இயற்கைப்புணர்ச்சிக்குப் பின்னர்த் தனதுதவியை நாடி வந்த தலைமகனைப் பாங்கன், 'நீ மெலிந்து வாடியிருப்பதென்? உன்னை இவ்வாறு வருத்திய நோய் யாதோ?' என்று வினவியதற்குத் தலைமகன் விடையிறுத்தது.

சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை
கான யானை யணங்கி யாஅங்
கிளையள், முளைவா ளெயிற்றள்,
வளையுடைக் கையளெம் மணங்கி யோளே.

(உரை). காட்டிலே திரியும் யானையைச் சிறிய வெள்ளிய அழகிய வரிகளையுடைய பாம்பின் குட்டி (கடித்து) வருத்தினாற் போல, என்னைத் தீண்டிவருத்தியவள், ஒரு சிறுமி; (பழம்பல் விழுந்து புதிதாய்) முளைக்கும் ஒளியுள்ள எயிற்றினையுடையவள்; சிலவாகிய வளைகள் அணியப் பெற்ற கையினள்.

அவ்வரி - அம்வரி; 'அவ்வளை' என்புழிப்போல. குருளை-குட்டி. எயிறு - முந்தித்தோன்றிய பல் விழுந்து பிந்தி முளைக்கும் பல். வளையுடைக்கையள் - சிலவாகியவளைகளை அணியும் இளம்பிராயத்தாள்; பேதைப்பருவப் பெண்களுக்குச் சில்வளையிடுதலும், பெதும்பைப் பருவமகளிர்க்குப் பல்வளையடுக்கலும் மரபென்வதைப் பதிற்றுப்பத்தில் (57, 6) 'சில்வளை விறலி' என்ற விடத்துரையாலும் அறிக. 'இளையள் வளையோ ளென்றுனக் கியாவரும், விளைபொருளுரையார்' என்பது மணிமேகலை (10, 78-80). எம் அணங்கியோள் - எம்மை அணங்கியவள்.

பரணர்] 120 [குறிஞ்சி

சரியான குறியிடத்துச்செல்லாது அல்லகுறிப் பட்ட தலைமகளைக் காணவுங்கூடவும் பெறாது வறிதுமீண்ட தலைமகன் ஆற்றுமை மிகுதியால் தன்னெஞ்சோடு கூறியது.

இல்லோ னின்பங் காமுற் றாஅங்
கரிதுவேட் டனையால், நெஞ்சே, காதலி
நல்ல ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா யோயே.

(உரை). பொருளில்லாதவன் (காம) இன்பத்தை(த் துய்க்க) விரும்பினாற்போல, எனது நெஞ்சே, நீ கிடைத்தற்கரியதொன்றை (தலைமகளின் கூட்டத்தை) விழைந்தனை; அதனால், நீ அவள் (உருவாலுந் திருவாலும் பருவத்தாலும்) சிறந்தவளாதலை அறிந்தாற்போல, பெறுதற்கரியவளென்பதையும் அறியாதவனே (ஆதல்வேண்டும்.)

இனி இப்பாட்டு, தலைமகளுடன் இயற்கைக்கூட்டம் பெற்று இன்புற்றுக் களித்துப் பின்பு அவளை விட்டுப்பிரியுந் தலைமகன் மீட்டுமவளைக்கண்டு கூடப்பெறுவது அரிதெனக் கலங்கி வருந்தியதுமாம்.

கபிலர்] 121 [குறிஞ்சி

இரவுக்குறிவருந் தலைமகன் செய்யுங்குறியை, பிறிதொன்றால் நிகழ்ந்த குறியொன்று ஒத்தவழி, அதனை அவன்செய்குறியென மயங்கி அங்குச்சென்று அவனைக் காணுது அது அவன் செய்தவஞ்சனையென்று கருதி வருந்திய தலைமகள், பின்னர் அஃதவன் பிழை அன்றென்றும், வழக்கம்போல் அவன் சரியான குறியிடத்து வந்து நெடுநேரமிருந்து தலைமகள் வரக்காணுது பின் வருத்தத்துடன் மீண்டானென்றும் பாங்கி அவனை எதிர்ப்பட்டு வினவி யறிந்துவந்து தனக்குணர்த்தியதைக் கேட்டுச் சொல்லியது.

மெய்யோ, வாழி தோழி? சாரல்
மைப்பட் டன்ன மாமுக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்ப லேற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்
தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் றடமென் றோளே.

(உரை). எ தோழி, நீ சொல்வதெல்லாம் உண்மைதானு? மலைச்சாரலினிடத்து, மைபூசப்பெற்றாற் போன்ற கரிய முகத்தையுடைய ஆண் குரங்கு சரியானபடி தாவாது தவறி விழுந்ததாலுண்டாகிய தீங்குடன் போனாற்போல மலைநாடனுகிய நமது தலைமகன் குறிபொய்த்துத் தவறியதற்கு எனது பெரிய தோள்கள் பசந்திட்டன.

மாமுகம்: மா- கருமை. முசு - குரங்கினொருவகை; கருங்குரங்கு. கலை - முசுவின் ஆண். ஆற்ற - சரியாக, நன்றாய். தப்பல் - தவறுதல். வாயா - வாய்க்காது, மெய்யாகாது, பொய்த்து; 'வாராத்தப்பல்' என்றும் பாடம்.

ஓரம்போகியார்] 122 [நெய்தல்

தலைமகனைப் பிரிவுற்றுத் தனித்திருந்த தலைமகள் மாலைப் பொழுதைக்கண்டு இரங்கியது.

பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீ ராம்ப லுங் குவிந்தன இனியே;
வந்தன்று வாழியோ மாலை;
ஒருதா னன்று, கங்குலு முடைத்தே.

(உரை). இப்பொழுது, ஆழமான நீர்நிலைகளில் பச்சை நிறத்துக் காலையுடைய கொக்கின் புல்லிய புறத்தையொத்த ஆம்பல்மலர்களும் குவிந்தன; மாலைப்பொழுதும் வந்தது; அதுவும் தனித்தன்று; இரவையும் பின்னே வரப்பெற்றுளது. (நான் எவ்வாறு உய்குவேன்?)

குண்டு - ஆழம். இனி - இப்பொழுது. வாழி-ஓர் அசை. ஒன்றுதான் அன்று - தான் ஒன்றுமாத்திரம் அன்று. 'கங்குலும்' என்ற சிறப்பும்மை சிற்றளவினதாகிய மாலைப்பொழுதினும் இராப்பொழுது மிக்க அளவினதாதலின் அது செய்யும் வருத்தத்தின் கொடுமைமிகுதியைக் குறித்து வந்தது.

ஐயூர் முடவனர்] 123 [நெய்தல்

பகற்குறியாகிய கடற்கரையிலுள்ள புன்னையம் பொழிலிடத்துத் தலைமகளுந் தோழியுஞ் சென்று தலைமகன் வரக்காணுது நெடுநேரங்காத்திருந்தபின், காலந்தாழ்த்து வந்த தலைமகன் சிறைப்புறத்தானுதலை உணர்ந்த தோழி பொழுது கடந்தமையால் வீட்டுக்கு மீள்வாமென்று தலைமகளுக்குச் சொல்லியது.

இருடிணிந் தன்ன வீர்ந்தண் கொழுநிழல்
நிலவுக் குவித்தன்ன வெண்மண லொருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் ; வரூஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே.

(உரை) நிலவைக் குவித்தாற் போன்ற வெண்மணல் பரந்த கடற்கரையின் ஒரு பக்கத்தே இருள் செறிந்தாற் போன்ற மிக்க நிழலையுடைய மிகக் குளிர்ந்த பெரிய கிளைகளையுடைய அழகிய புன்னைமரப்பொழில் தனித்துப் பொலிவின்றிக் கெடுமாறு (காதலர்) இன்னும்வாராதொழிந்தார்; மீன் பிடிக்கச்சென்ற நமது ஐயன்மாருடைய படகுகள் (அந்தி நேரம் ஆய்விட்டபடியால்) கடிதின் திரும்பிவந்திடும்.

ஈர் - ஈரம், குளிர்ச்சி; தண்மை - குளிர்ச்சி; ஈர்ந்தண் - மிகுதியைக் காட்டவந்த ஒருவகை அடுக்குத்தொடர், 'எறுழ்வலி', 'எறுழ்முன்பு', என்றாற் போல. 'ஈர்ந்தண்' என்பதைப் புன்னைக்கும், 'கொழுநிழல்' என்பதைப் பொழிலுக்கும் அடையாக்குக. புலம்ப - தனித்துப்பொலிவழிய; புலம்பு-தனிமை. தலைமகனும் மகளும் அப்பொழிலகத்தே கூடியிருந்தகாலை மிகவும் விளக்கமுற்று, இப்பொழுது அக்கூட்டம் அங்கு நிகழப் பெறுமையால் பொலிவழிந்து விட்டமையால்'புலம்ப'என்றாள். கருங்கோடு-கருமை - பெருமை. மீன் வேட்டம் - கடலிற் சென்று மீன்பிடித்துக்கொணர்தல். ஐயர்-தமையன்மார். என்னையர்-தலைமகளின் தமையன்மாரைத் தோழி தன் தமையன்மாரென்றது தமக்குள் வேற்றுமையின்மையால். திமில் - மீன்பிடிப்பார் மீனைப்பிடிப்பதற்கு ஏறிச்செல்லும் படகு; A fishing canoe or raft. தலைமகனைத் தலைமகள் எதிர்ப்படாமைக்குக் காரணமான பொழுதுகடந்தமையை அவனுக்குணர்த்த 'இன்னும் வாரார்' என்றும் எதிர்ப்படுவதற்குற்ற இடையூற்றைத் தெரிவிக்க,'வரூஉம் ஐயர் திமில்' என்றும் கூறினளாம்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[616-வது பக்கத் தொடர்ச்சி]

கவியைக் கடந்த கருத்து முளதோ.

நூறாண்டு இராமன் ஆண்டபின் இவ்வரசினைப் பரதனடைந்து நெடுங்காலம் ஆள்வான் என்றக் கல்லாப்பேதைகைகேயி வான்மீகத்தில் கழறியதொன்றிற்கே எதிருரை இனி எஞ்சிநிற்கின்றது. "பரதச்சாபி ராமஸ்ய த்ருவம் வருஷ சதாத்பரம்" என்ற கைகேயியின் முதனூல்வாசகம் எவ்விதியின் நோக்கம் பற்றி விளம்பலாயிற்றென்பது விளங்கிற்றில்லை. நூறாண்டென்பது அங்கு எல்லையைக் குறிக்கும் எண்ணன்று என்றும், பல வருடங்கள் என்றே கொள்ளவேண்டும் என்றும் கூறுவார் உரைகாரர். "பதினாயிரவருஷம் இராமன் அரசாளப்போவதைக் கைகேயி அறியாளாதலின் உலகவியல்பை ஒட்டி நூறு வருடம் என்றாள்" என்பது தீர்த்தீயம். அண்ணன் சிலகாலம் ஆண்டபின் தம்பியும் அரியணை யேறுவான் என்ற விதி பண்டைநாள் அரசியல்முறையெதனிலும் இருந்ததா யறிகிலேம். எனினும், இவ் வெண்ணம் யாதுமறியாப் பேதை கைகேசியின் மனதிற் குடிபுகுந்திருந்தது. கூனி தன் மறுமொழியில் இதனையே விலக்கமுயன்றனளாய், "இப்பொழுது இராமர் பட்டத்துக்கு வரப்போகின்றார்; அவருக்குப்பின் அவர் மகன். இராமர் பட்டத்திற்கு வந்துவிட்டாரானல் உங்கள்புத்திரர் பட்டத்திற்கு வருவதிலிருந்து விலக்கப்பட்டவராவர். கோபம்மட்டும் உங்களுக்கு அதிகமேயொழிய, ஓர் அரசனுடைய ஒவ்வொரு குமாரரும் பட்டத்துக்கு வரவேண்டியவர் என்று நீங்கள் கொள்ளும் அபிப்பிராயம் சரியானதன்று...... புத்ரவாத்ஸல்ய முடையீர், உங்கள் புதல்வர் பட்டத்தைஅடையாவிடில் அநாதராய்ச் சுகமற்றுப் போய்விடுவார்" என்று முதன்முதலில் எடுத்துக்காட்டிய பின்னரே மற்றவைகளுக்குப் பதிலுரைக்கப் புகுகின்றாள். கம்பரில் வந்த கூனி, "ஒன்றுமாறியாப் பேதை இக்கைகேயி, இன்றல்லாவிடினும் பின்னொருநாள் பரதன் பட்டத்திற்குவருவானென்று ஒருகால் எண்ணுகின்றாளோ" என அயிர்த்தாளென்ன அது அமையாதென்பதைத் தன்னுரையின் இறுதியில்,

கெடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீ
ருடுத்த பாரக முடையவ னொருமகற் கெனவே
கொடுத்த பேரர சவன்குலக் கோமைந்தர் தமக்கு
மடுத்த தம்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றாள்

[உனக்கு அருமையான புதல்வனுகிய பரதனைக் கெடுத்தொழிந்துவிட்டாய். பொலிகின்ற கடல்சூழ்ந்த பூமியையுடைய தயரதமன்னன், மூத்தகுமாரனுகிய இராமன் ஒருவனுக்கு என்றே கொடுத்த இந்தப் பெரிய இராச்சியம், அந்த இராமனது குலத்தில் வரிசையாய்ப் பிறப்பவர்களாகும் மூத்தகுமாரர்களுக்கும், அவ்விராமனை அடுத்திருக்கின்ற தம்பியாகிய இலக்குமணனுக்கும் ஆகுமே அல்லாமல் மற்றவர்களுக்கு வரவேனும் அனுபவிக்கவேனுங் கூடியது ஆகுமோ]

என்றுகாட்டி முடிப்பாளாயினள். இச்செய்யுள், வான்மீகத்தில் கூனியின்மொழிகளாய் வந்துள சுலோகத்தின் மொழிபெயர்ப்பே யன்றி வேறன்று. "அடுத்த தம்பிக்கும் ஆம்" என்பது, அங்கு அவள் இராமனுக்கும் இலக்குமணனுக்கும் உள்ள நட்பின் உறுதியைப் பலபடச் சொல்லியிருப்பதன் கருத்தைத் தழுவியிருக்கின்றது. இச்செய்புட்கு வேறோர் பொருள் கூறி அதனின்று, தயரதன்முதல் மந்தரையீறாக யாவர் தன்மையும் வேறாகத் தோன்றும்வண்ணம் மதுரைச் சோமசுந்தரபாரதியா ரவர்கள் தம், "தசரதன் குறையும் கைகேயி நிறையும்" என்னும் நூலில் மிகவும்அருமையான சான்றுகளைக்கொண்டு வாதித்திருக்கின்றனர். அவர் வாதிக்கின்ற வழக்குமுறையின் திறமையை நினைப்போருள்ளம் களிகூரும். உரைநடை நயத்தில் அந்நூல் இணையிலா அழகொடுந் திகழ்கின்றது. கைகேயியைத் தயரதன் மணங்கொண்டநாள்அயோத்தியரசைச் சுல்கமாய்ப் பிரதிஞ்ஞை செய்திருக்க அதற்கு மாறாக இப்பொழுது இராமன்பால் கிளர்ந்ததொரு ஆசையால் ஓரம்போகி அவனுக்கு அரசினை அளிக்க நின்றனனென்றும், அதனை இச்செய்யுளில் கூனி கைகேயிக்கு நினைப்பூட்டினளென்றும், ஆதலால் எத்திறத்திலும் தன்கணவன் வாய்மை இழவாதபடி காத்தல்பொருட்டே கைகேயி வேறுவரத்தினல் அரசைப் பரதனுக்கு நல்கவைத்துத் தீராப் பழியைத் தான் சுமக்க நேர்ந்தனள்என்றும் கம்பர் கருதி,அதற்கிணங்கக் கைகேயியைக் கற்பிற்சிறந்த பெருமாட்டியாக்கினரென்று பாரதியார் காட்டுவார். இதுகாறுங் கூனியின் சூழ்ச்சியைக் கடிந்துநின்ற கைகேயி இறுதியில் இணங்கி ஒழுகுமாறு பகர்ந்த "கெடுத்தொழிந்தனை" என்று துவக்கும் இச்செய்யுளில் புதியதோர் விடயமே குறிப்பித்திருத்தல்வேண்டும் என்ற கொள்கையினராய் அவர், "கெடுத்தொழிந்தனை உனக்கரும் புதல்வனை. கிளர்நீர் உடுத்த பாரகம் உடையவனுயிருந்த தயரதன் உன் வயிற்றிற் பிறக்கும் ஒரு மகற்கெனவே, முன் சுல்கமாகப் பிரதிஞையுடன் கொடுத்த அயோத்திப்பேரரசு, உன்வயிற் றுதித்த பரதனொருமகனுக்கும், இருவழியும் பேரரசர் மரபின் வந்த உபயகுலோத்துங்கனை அப்பரதன் குலக்கோமைந்தர் தமக்கும், அவனும் அவன்வழித்தோன்றினரும்இல்வழி அடுத்த 'சுல்க'க் கிரமவாரிசான உன் தம்பி யுதாஜித்துக்கும் ஆவது அறமுறையாகும்: இவரல்லாப் பிறர்க்காவது அறமில்லை" எனப்பொருள்கூறி, "முன்சுல்கப்பிரதிஞை வரலாற்றுண்மையை யெடுத்

துரைத்து, அதனைமறந்து வரன்முறைக்கிரமத்தில் இராமனுக்காம் அரசை அன்று அவனுக்குத் தசர தன் தரப்போவதாயெண்ணி அன்னுளைக்கத்தில் மகிழ்ந்த மங்கையை மந்தரை தெருட்டிப் பரதனுரிமையைப் பாதுகாத்து அரசன் பிரதிஞையையும் அறத்துறையையும் நிலைநிறுத்துங்கடன் நின்னதேயாகும் என்று அவட்கு அறிவுறுத்துவாள் கூற்று இது" என்று விளம்புகின்றனர். இவ்வுரையின் நேர்மையையும், இவ்வுரைகொண்டு நாட்டப்பெறும் கொள்கையின் பயனையும், அக்கொள்கைக்குச் சார்பாக அவர் கூறும் பல காரணங்களின் அமைதியையும் ஆராய்ந்து தகுதிகாண்பது மிகவும் சுவையுடை யொரு கருமமாதலின் அதனை மேற்கொண்டு முயலவேண்டுமென்னும் விழைவு எழுதல் யாவருக்கும் இயற்கையே ஆயினும், அவ்வாராய்ச்சியைக் கைக்கொள்ளுமுன் இப்பொழுதே ஓர்ந்துணரற்பால தொன்றுளது.

இராமன்பால் வைத்திருந்த அன்பை இறையும் கைகேயி மாற்றியதில்லை என்றும், இதுகாறும் அறத்தாறு அறியாப் பேதைமையால் அவள் கூனிக்கிணங்காது வெறுத்து மறுத்தனள் என்றும், பின் சுல்கப்ர திஞையைக் கூனி நினைவுபடுத்தியதும், தன் கொழுநனும் தயரதவேந்தன் வாய்மையிலிருந்து விலகுதல் ஆகாதென்னும் தூய சிந்தை வந்து குடிப்புகவே கைகேயி பரதனுக்குப் பட்டம் வாங்கிவைக்கத் துணிந்தனள் என்றும் கம்பர் கருத்துட்கொண்டிருக்கின்றாரென ஸ்ரீமான் பாரதியார் இயம்புகின்றனர். ஆனால் அடுத்துவரும் இரண்டு பாசுரங்களில் கைகேயி யெய்திய மாறுபாட்டின் தன்மையும் அதன் காரணங்களையும் கம்பரே கூறியிருக்கக் காண்கின்றோம். அவை ஸ்ரீமான் பாரதியார் முடிவிற்கு ஆதாரமாகாமையுடன் பலவகைகளில் எதிருறக் காட்டும் குறிப்புக்களே உடையவைகளாய் இருக்கின்றன. கூறுகின்றார் கம்பர் பிரான்,

> தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
> தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
> மாயை யும்மவர் பெற்றுள வாரமுண்மை யாலும்
> ஆய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும்

[கோடிய கூனி இவ்வார்த்தைகளைச் சொல்லவும் தேவர்கள் புரிந்த மாயத்தாலும், அவர் பெற்றிருக்கின்ற வரங்கள் உண்மை யாதலாலும், அந்தணர்கள் செய்துள அருமையான தவங்களின் பயனாகவும், கைகேயியின் தூய சிந்தையும் கூனியின் சூழ்ச்சிக்கு இணங்க மாறிப்போயிற்று]

> அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந்
> துரக்க நல்லரு டுறந்தன டூமொழி மடமான் [மன்
> இரக்க மின்மையன் றோவின்றிவ் வுலகங்க ளிரா
> பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின் றதுவே.

[அரக்கர் செய்த பாவங்களும், தேவரும் முனிவர்களும் செய்த புண்ணியங்களும், எற்றித் தள்ளுவதால் தனக்குரிய நல்ல அருளைத் துறந்துவிட்டனள். தூயமொழிகளை யுடைய இளமான்போன்ற கைகேயியின் இரக்கம் இல்லாமையால் அன்றோ, இன்றைக்கும் இவ்வுலகத்தவர் இராமனது பரந்த பழைய புகழ்என்னும் அமிர்தத்தைப் பருகுகின்ற நன்மை வாய்த்தவரா யிருக்கின்றனர்!]

எனின், கூனியின் இறுதிமொழியே கைகேயி உடன்பட்டதற்குக் காரணமாயிற்றென்று பாரதியார் கூறுவதற்கு எதிராகக் கம்பர், இமையவர் மாயையையும் அவர் பெற்றுள வரங்களையும், அந்தணர் புரிந்த அருந் தவங்களையும் உறுதியாய காரணங்களாகக் காட்டுகின்றனர். இராமன்பால் அவள் கொண்ட நேயம் மாறியதில்லை என்ற பாரதியார் கூற்றிற்கு மாறாகக் கம்பர், 'நல்லருள் துறந்து இரக்கமற்றவளாயினாள் அவள்' எனச் செப்புகின்றனர். அறத்தாறு மறந்திருந்த பேதை பின், தயரதனை வாய்மையில் நிலைநிறுத்தவேண்டும் என்ற தூய சிந்தையளாயினாள் எனச் சாதிப்பார் பாரதியார்; கம்பரோ, முன் தூயதாயிருந்த சிந்தை இப்பொழுது திரிந்தது என்று ஐயமறச் சாற்றுகின்றார். இவ்வண்ணம் கவியே தன்னுடைய இதயத்தைத் தெளிவாக உரைத்திருக்க, வேறு சில செப்பப்புகுமுன், அக் கவி தன்னெஞ்சு அறிந்தேயோ அறியாமலோ பொய்த்திருக்கிறார்என்று சாதிக்கவேண்டியது அவசியமா யிருக்கின்றது. ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியார் அஃதொன்றுஞ் செய்ய முயன்றிலர். கம்பரே தன்கருத்து இன்னதென்று மறையாமல் காட்டிநிற்பதை மதியாது அப்புறங் கடந்து ஆராய்வதன் முடிவு யாதென இனித் தேர்ந்து கொள்ளலாம்.

ஆதலின், முதனூலின் கருத்திற்கிணங்கியபடி கம்பரது இதயம் இதுவென்று பாரதியார் பகர்வது பெரிதும் ஐயத்திற்கிடமாகி நிற்கின்றது. மற்று, வேறொருவகையில் முதனூலைத்தழுவியே, 'கெடுத்தொழிந்தனை' என்ற தொடக்கத்து இச்செய்யுள் வரையப் பெற்றிருக்கின்றது எனச் சற்றுமுன் இங்குக் குறித்திருப்பதை ஏற்பதற்கு யாதும் இடையூறில்லாமையையும் எளிதில் உணரலாம். "இராமன் நாலுண்டுகள் ஆண்டபின் பரதன் அரசனுவான்" என்று கைகேயி மயங்கி அவ்வான்மீகத்தினுள் உரைத்ததோர் உறுதி அமையாதென்று மந்தரை விளக்கிய மறுமொழிகளே இவை இங்குக் கம்பரால் கொள்ளப் பெற்றிருக்கின்றதெனின், எல்லாப்படியானும் அது முதனூல்மொழிகளுக்கும் கம்பரேகாட்டுகின்ற காரணங்களுக்கும் முரணுமல் ஒத்துநடக்கும் உண்மை ஓர்தற்பாலது.

பாரதியார் கூற்றில் இன்னொருவிடயத்தையும் இவ்விடத்திலேயே கருதிமுடிக்கலாம். "கெடுத்தொழிந்தனை" என்ற செய்யுளிற்குத் தான்கொண்ட பொருளை ஏற்காவிடின், முதன்முறைமந்தரை கைகேயியின் மனதைக்கலைக்கும்வண்ணம் உரைத்தவைகளுக்கும், அவைகளை ஏற்காதுகைகேயிகடிந்தபின்னும்அஞ்சிஅகன்றிலளாய் அவள்மறுமுறை உரைத்தவைகளுக்கும் அதிகம் பேதமில்லாதொழியுமென்றும், அப்பேதமில்லையேல், முதலில் "அறிவிலி அடங்குதி' என்றுவெறுத்தவள், பிறகு அத்தகைய சொற்களுக்கே இணங்கியது இயற்கையாகாதென்றும், மதித்து—"இறுதியில் (கைகேயியை) எற்றிணங்கச் செய்தது அறத்தாறமுங்காத நெறிமுறைநியாயமா யிருத்தல்வேண்டுமென்ப தொருதலை யன்றோ? முதலிற்றான் கேட்கமறுத்து வெறுத்த கேவலம் தன் மகனலம் ஒன்றையே கருதி இறுதியிற்றன் சிந்தையின் தூய்மையைக் கைகேயி துறந்தனளாகக் கொள்ளுதல் வேறு வழியற்ற விடத்தன்றி முறையாமா? அவளறச்சிந்தைக்கும் அருங்கற்புக்கும் பொருந்துவதான பொருள் வேறிக்கவிவருத்தமின்றித் தருமாயின், அதைக்கொண்டு பொருந்தாப் புன்பொருள் போகவிடல் கடனும்: முறையும் அஃதேயாமன்றோ"—எனச் சாற்றுகின்றனர்.

முதன்முறை மொழிந்த "மகன்நலத்தையே" மீண்டும் மந்தரை வற்புறுத்தினளென்னும் மயக்கந் தெளியுமாறு முன்னரே இங்கு (3-594) அம்மொழிகளின் வேறுபாடு வகுத்துக்காட்டப்பெற்றிருக்கின்றது. இராமன்முதலியோர் நற்குணப்பான்மையில் சலியாவுள்ளத்துக் கைகேயியை, "அப்படியே ஆயினும் என், மறம் நினைந்துமை நலிகிலராயினும், மனத்தால் இறனுறும்படி இயற்றுவர் இடையறு இன்னல்" என்று தெருட்டுவாள்போல் மந்தரை மருட்டிய சூழ்ச்சியை மறவாக்கால் முன்மொழிகளினின்று பின்னவை முற்றினும் வேறான இலக்குடையன வென்னும் இரகசியம் வெளிவருவது அருமையாகாது. எனின், "கெடுத்தொழிந்தனை" என்ற செய்யுளிற்குரிய செம்பொருள் பொருந்தாப் புன்பொருளாவது எங்ஙனம்!

கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப் பெற்றது தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

விலை ரூபா **4**. தபால் செலவு வேறு.

EDUCATIONAL PUBLISHING CO.
Nungambakam, Madras.

Estd. NATIONAL **1906**
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-**9, Old Court House St., Calcutta.**

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over **Rs. 1,47,000,00**

Prompt settlement of Claims. Claims paid exceed **Rs. 67,000,00**

IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Oompany to-day.

R. G. DAS & Co, OR **K. S. GOPALAYYA**
Managers. *Branch Secretary, Loane Square, Broadway, Madras.*

முருகன் அல்லது அழகு

ஸ்ரீமான்-திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் யாத்தது. இஃது இயற்கை அழகை எடுத்துக்கூறும் நூல். இயற்கை அன்னையின் மாண்பை இந்நூற்கண் காணலாம். இந்நூற்கண் முருகன் சொற்பொருள் விளக்கம், அழகினியல், இளமைப்பேறு, இயற்கை மாண்பு, நோன்பு, வழிபாடுகளின் திறம், முருகனடியார் இயல்பு முதலியன ஓதப்பட்டிருக்கின்றன. இந்நூலை முற்றும் பயில்வோர் உள்ளத்தில், இயற்கை வழிபாட்டில் ஆர்வம், ஒரே கடவுள் ஒரே நெறி என்னும் உறுதி, எவ்வுயிர்க்குந் தீங்கு நினையாப் பேரறம் முதலியன நிலவும். இயற்கை வருணனையும் உரை நடையும் நெஞ்சைக் கவரும்.

விலை ரூபா 1.

	ரூ.	அ.
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ...	2	8
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை ...	2	0
தமிழ்த் தென்றல் ...	2	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் ...	1	0
சைவத் திறவு ...	0	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே ...	0	8
சைவத்தின் சமரசம் ...	0	8
கடவுள் காட்சியும் தாயுமானுநம் ...	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம் ...	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஏககாலத்தில் வாங்குவோருக்குத் தபாற்செலவின்றி, மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி.யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

பிரசுரங்கள்.

சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. முச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் நனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினை யுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையினோரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி
திருவல்லிக்கேணி, :: :: சென்னை.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

டாக்டர் பெஸண்டு அம்மையார், தாம் காங்கிரஸ் தலைவர் பதவியை வகிக்கத் தயாராக விருப்பதாகவும், அப்பதவி வகிப்பதனால் ஏற்படும் கஷ்டத்தை அனுபவிக்கத் தயாராக விருப்பதாகவும் அறிவித்திருக்கின்றார். தனக்கு வயதாய்விட்டதெனினும், தான் இத்தூல சரீரத்தைத் துறக்குமுன் இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்து பெறுமாறு செய்யத் தீர்மானித்திருக்கின்றார் என்று அச்செய்தியில் அவர் கூறியிருக்கின்றனராம்.

***

இதுவரை மஹாராஷ்டிரத்தில் 2 இலக்ஷம் பேர் உப்புச் சத்தியாக்கிரஹம் செய்தனர் என்றும், ஒரு லக்ஷம் பேர் வனசத்தியாக்கிரஹத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும், மஹாராஷ்டிர காங்கிரஸ் கமிட்டியின் அறிக்கை யொன்று கூறுகின்றது.

***

பிரிட்டிஷ் பார்லிமெண்டுசபையில் ஜ்யார்ஜ் மன்னர் செய்த பிரசங்கத்தில் இந்திய அரசியல் திருத்த விஷயமாய் இனிக் கூடும் சர்வகட்சி மஹாநாடு இந்திய மக்களின் நலத்தை நாடும் நோக்கத்துடன் வினை செய்யவேண்டும் என்றும், அதற்கான வழியில் எல்லோரும் கூட்டுறவு தரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

***

சிந்துநதியில் சென்றவாரம் ஏற்பட்ட வெள்ளத்தால் 100 கிராமங்கள் அழிந்துபோயின வென்றும், ஒருகோடி மதிப்புள்ள சொத்துகள் சேதமாயின வென்றும், இந்த வெள்ளநிலையை ஏற்ற காரணமாகக் கொண்டு கொள்ளைக்காரர் பலர் கொள்ளை அடித்து வருகின்றனர் என்றும் பம்பாய்ச்செய்தி கூறுகின்றது.

***

லண்டனில் கூடவிருக்கும் சர்வகட்சிமஹாநாடு அக்டோபர்மாதம் கூடுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டது. இப்பொழுது, முதன்மந்திரி ராம்ஸேமாக்டொனல்டு, நவம்பர் இறுதியில்தான் அது கூடுமென்று அறிவிக்கின்றார்.

***

கராச்சியில் மாதர்கள் ஊக்கமுடன் மறியல் வேலை செய்கின்றனராம். சென்றவாரம் மாணவர்களைப் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லவிடாமல் மறியல்செய்தனராம். இதனால் பல பள்ளிக்கூடங்கள் காலியாக விருந்தனவாம். ஸ்வாமிதரிசனத்திற்குச் செல்பவர்களில் கதர்ஆடை அணியாதவர்களை உள்ளேவிடாது மாதர்கள் தடுத்தனராம். இதனால் பலர் கோயிலுக்குள் போக முடியவில்லையாம்.

பர்மா கவர்னரான ஸர். சார்லஸ் இன்ஸ் ரஜாவில் இங்கிலாந்து போவதால்அந்தவிடத்திற்குச்சர்.சோஸப் மாங்ஜி என்ற பர்மியர் நியமனம் பெற்றிருக்கின்றார் என்று பர்மாச் செய்தி கூறுகின்றது.

***

ஆகஸ்டு மாதம் 8-ந்தேதியன்று யாரோ வொருவர் ஸ்ரீமாளவியாவிற்கு விதிக்கலான அபராதத்தொகையை மாஜிஸ்டிரேட்டிடம் கொடுக்க அவர் மாளவியாவை விடுதலைசெய்யுமாறு பம்பாய் ஜெயில் அதிகாரிக்கு உத்திரவிட அதன்மேல் அன்று பிற்பகல் ஸ்ரீமாளவியா விடுதலை செய்யப்பெற்றார். இவ்வபராதத்தொகையைக் கட்டியவர் யாரென்று தெரியவில்லை. விடுதலையானதும் பண்டிதர் சௌபாத்தி கடற்கரையில் நடந்துகொண்டிருந்த கூட்டத்திற்குச்சென்று அங்குப் பேசியதாவது:—"என் பொருட்டு அபராதத்தைச்செலுத்தியவர் தேசத்திற்கே அவமானத்தை விளைத்துவிட்டார். இது நட்பின் செயலென்று நான் கருதமுடியாது. ஊர்வலம் நடத்தும் உரிமைக்கிடையூறாய் நிற்கும் உத்திரவுகளை மீறுவது தர்மமாகும். இனியும் இத்தகைய உத்திரவை மீறுவேன்.நாம் 6மாதகாலம் தியாகம் செய்வோமாயின் இந்தியா பூர்ண சுதந்திரம் பெற்றுவிடும்."

***

மான்செஸ்டர் வியாபார சங்கத்தின் தலைவரான மிஸ்டர் ரிச்சர்ட்லீ, மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகையில் எழுதுவதாவது:—"இந்திய அரசியல் பிரச்னைவிஷயமாய்க் காபினட் சபையினர் பிரிட்டிஷ் ஜனங்களைக் கலவாமல் முடிவுசெய்தல் சரியன்று. இந்திய விஷயங்களில் பலவற்றைப் பிரிட்டிஷ் வாக்காளர்கள் அறியார். இந்தியரும் பிரிட்டிஷாரும் சினேகமனோபாவத்துடன் காரியங்களைச் செய்யவேண்டுமே யல்லாது அடக்குமுறைகளைக் கையாள்வது புத்திசாலித்தனமாகாது. காங்கிரஸ்கட்சித் தலைவர்கள் சர்வகட்சி மஹாநாட்டிற்கு அழைக்கப்பட வேண்டும். சர்வகட்சி மஹாநாட்டில் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் உதவி கொண்டு இந்தியப்பிரதிநிதிகள் இந்திய அரசியல் முறைகளை நிர்ணயம் செய்யவேண்டும். இவற்றைக் கவனித்துத் தொழிற்கட்சி கவர்ன்மெண்டார் இனியாவது காரியங்களைச் செய்யவேண்டும்."

***

லிவர்ப்பூரில் காதலிக் கிறிஸ்தியர்களும், பிராடஸ்டெண்டு வகுப்பினருமாகச் சேர்ந்து சண்டை செய்தனர் என்றும், போலீசார் வந்து சண்டையை விலக்க நேர்ந்ததென்றும், 2,000 பேர்வரை இச்சண்டையில் கலந்திருந்தனராதலால் பலருக்குக் காயமேற்பட்டுள்ளதென்றும் தெரிகின்றது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்ட்:—யூனிடட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

189116



குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)

அமிர்தாமலக தைலம்

டிப்போ.,
பம்பாய்
கல்கத்தா

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
ஜீவஸுதா (Reg.)
பாதாமி ரசாயனம்

பிருங்காமலக தைலம்

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD

பிரான்சு:
மதுரை
காஞ்சீபுரம்.

சோல் ஏஜண்ட்:—யூனிடட் கன்ஸர்ன் 54 பந்தர்தெரு, சென்னை.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு	சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு	,,	,,	2 8 0
தனிப்பிரதி விலை		அணா	0 4 0

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

காந்திக்கு ஜேய் !

கதர் சில்க் அங்க வஸ்திரம்.

சுத்த கதர் சில்க். கையினால் செய்த பட்டு. 5 மு. பட்டு 1-க்கு ரூ. 3-8-0 முந்துங்கள். 500 பட்டுகளே வந்திருப்பதால் உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஸெண்ட்ரல் ஸ்டோர்ஸ்
373 எஸ்பிளநேடு, சேன்னை.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம்	...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்		ரூ.	5.
ஆரண்ய காண்டம்	...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம்	...	ரூ.	4-8.
சுந்தர காண்டம்	...	ரூ.	5.

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு):

மானேஜர் :—"கலா நிலயம்",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)